ஆசிரியர் ◆ கண்ணதாசன்



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

நுண்ணிடை அசைவிற் பாடல்
நூபுர ஒலியில் தாளம்
கண்வழித் தமிழர் ஆடல்
கார்குழல் வழியில் மேகம்
பண்ணிய திரைக்குப் பின்னே
பல்வகைச் சுவைகள் கூட்டும்
எண்ணரும் கூத்தைக் கண்டான்
ஏங்கிடக் கோதை சென்ருள் !

"சென்றனள் !" எனுமோர் உள்ளம்
"சென்றிலள்" எனுமோர் நெஞ்சம்
நின்றவள் உருவம் சென்றும்
நிழலுரு விழியில் தேங்கும்
தென்றலின் தாயர் வாழும்
தேன்நிலா மாடத் தின்மேல்
அன்றிலைக் காண்பான் போன்றே
அசைவிலா திருந்தான் வேந்தன் !

பொன்னியன் தமிழர் கோமான்
பூவையைப் பூவாய்ப் பெற்றேன்
அன்னியர் உதிரந் தோய்ந்து
அளப்பருங் கதைகள் கூறி
மின்னிய உடைவா ளோடும்
வேற்படு மார்பிற் காயப்
பொன்னொளி யோடும் வந்தான்
புலிமுனம் புலியைப் போலும் !

"வாழிய ! தமிழின் தந்தை
வாழிய தமிழர் தந்தை !
வாழிய !" என்ருர் சோழ
வளவனே டுறவோ ரெல்லாம் !
ஆழியின் முழக்கம் போலும்
அவ்வொலி மீனன் நெஞ்சைத்
தழையின் உருவை விட்டுத்
தனிப்படத் தூக்கப் பார்க்கும்.

தோய்ந்தவன் நெஞ்சைத் தூக்கும்
தோல்வியை உடனே ஏற்றுப்
பாய்ந்தவன் விழியைத் தூக்கிப்
"பாதிதான் வென்ருேம் !" என்றே
ஓய்ந்தவன் களிற்றை நோக்கி
"உனக்குமா மயக்கம் ?" என்ருர் ;
ஆய்ந்தவ ரல்லால் யாரும்
அறிவரோ தாயின் நெஞ்சம்

தன்னிலை அறிந்தான் வேந்து ;
தனைவர வேற்கும் சோழ
மன்னனைக் கண்டான் ! "வீர
வாழ்க !" வென் றுரைத்தான்; அங்கு
முன்னவன் வாழ்த்துக் காக
மூன்றுநா ழிகைக்குப் பின்னே
சொன்னவன் வாழ்த்தைக் கேட்டார்
சுவைபடச் சிரித்தார் ; சென்ருர் !

களிற்றினின் றிறங்கி வையன்
காவிரித் தாதை தன்னைக்
களிப்புறக் கட்டிச் சேர்ந்து
கடலெனும் உணர்வைக் காட்டி
அளியினுக் களவுண் டாமேல்
அதுஇதென் றுரைப்பான் போல
விழியினும் சிரித்தான் ; சோழ
வீரனும் சிரித்தான், "வாழ்க !"

முழக்கிய வாறே சென்ருர்
மூண்டதோர் கூட்டம் யாவும்
பழக்குலை தன்னை நன்கு
பசித்தவன் மணக்கும் காட்சி
விழிக்குநாம் அளிக்கும் நல்ல
விருந்தென எண்ணி மேளம்
முழக்கிய பந்தர்க் குள்ளே
மொய்த்ததில் ஈக்கள் தோலும் !

காட்டினுள் மலரும் வண்ணக்
காவினில் மலரும் ; முல்லை
வீட்டிலும் மலரும் என்ருல்
வியப்பவர் சோழன் பொன்னி
நாட்டினுள் சென்ருல் அன்று
நங்கையின் மணநாட் சேதி
கூட்டிய பருவப் பெண்டிர்
குளிர்முக நகையைக் காண்பார் !

கடிமணம் காண வந்த
காளையர் மாத ரார்தம்
பொடிநகை காண லாகி(ப்)
புதியதோர் உவமை தேட(த்)
துடியிடைக் கிளிகள் அந்த(த்)
துட்டர்தம் குறும்பு நோக்க(த்)
தொடிவளைக் கைகள் ஆடை
தோளொடும் வளைத்து மூடும் !

எள்விழ எண்ணெ யாகும்
இல்முழு திருந்த வீரர்
கள்ளவிழ் மலரி னூர்தங்
கண்களில் தமிழர் பெற்ற
தெள்ளிய கற்பின் ஆட்சி
சீருறக் கண்டார் ; சற்றுத்
தள்ளிய படியே நின்ருர் ;
தம்மையும் திருத்திக் கொண்டார் !

அப்புறம் மாதர் நின்ருர் ;
அன்னவர்க் குரியர் கூட
இப்புறம் நண்ப ரோடும்
இடிப்புற நின்ரு ரல்லால்
துப்புறச் சிவந்த வாயர்
தோளொடுந் தோள்கள் மோதிக்
கைப்புறம் வளைத்து நிற்கக்
கண்டிலர் ; தமிழர் அன்னர் !

மணமகன் வருவ தாக
வாய்வழிச் செய்தி ஓட
குணமகன் உருவை நோக்கக்
கூடிய கூட்டம் யாவும்
அலைகடந் தகன்ரு ரேனும்
ஆடவர் தனித்தே நின்ருர் !
இலைஅள வொழுக்கங் கூடத்
திசைகெடா தெழுந்தார் ; கண்டார் !

பூக்களைத் தொடுத்தாற் போலப்
பொலிவுறும் வடுக்கள் தோன்றிப்
பாக்களை அடுக்கும் மார்பன்
பாண்டியன் மறவர் தாதை
நாக்கினைப் பிறர்கா ணுது
நகைத்திடும் கனியை நாடி
"தாக்குக !" என்பான் போலத்
தாங்கிட வந்தான் அங்கே !

(வேறு)

நெல்சேரத் தலைசாயும் பயிரன்ன மாது
நிலநோக்கி நலநோக்கி நிறைகூட்டி வந்தாள்
வில்சேரப் புலிசேர விளையாடு மீனன்
விண்மீனைக் கண்மீனுக் கிணைகாண நின்ருன்
கொல்வாளைக் கிழாக்கிக் குனிப்புற்ற கோதை
"குழல்பாரும் ! அதுகூட மொழிபேசும் !"
என்று
சொல்வாளைப் போல்வந்து சுகமாக நின்ருள்
தூங்காமல் தென்னுடன் தூக்கத்தி
லாழ்ந்தான் !

சத்தான பண்ணுக்குச் சரியான தாளம்
தாளாத நெஞ்சத்திற் காணும்தென் னுடன்
முத்தான பெண்ணுக்கு முன்னுக நின்று
முப்பாலுக் கப்பாலும் மோகத்தைக் கண்டான்!
புத்தாடை மணத்தோடும் பூவாடை யோடும்
புலிநாட்டு மண்தந்த புகழ்வாடை யோடும்
தத்தாத தத்தைக்குத் தன்தோளி ரண்டும்
தருவானைக் காண்பாரும் உறவாகக்
கொண்டார் !

(வேறு)

கூடிய கூட்டம் வாழ்த்த(க்)
கோதையர் நலப்பண் பாடத்
தேடிய இன்பம் யாவும்
சிலையுறுக் கொண்டாற் போலும்
ஆடிய மடந்தை தோளில்
அறுவகை மலர்கொள் மாலை
சூடினன் மன்னன் ; தோகை
தூய்மையில் மலரும் தோற்கும் !

முதல் இரவு

வெண்ணில வொளியும் மெல்ல
வீசிடும் தென்றற் காற்றும்
பெண்ணியல் புற்ற பூக்கள்
பிழிந்ததிற் கலந்த தேனும்
அண்ணலை மடந்தை கூடி
அடிக்கடி மூச்சு வாங்க
எண்ணியோர் அமைத்த மாடத்(து)
இடையிடை வந்து போகும்

கட்டிலே கிடக்க வேண்டும்
காதலர் என்ப தாற்ருன்
கட்டிலென் றுரைத்தார் ; அந்தக்
காதலர் காதல் முல்லை
மொட்டையே மலர வைத்து
முதல்மணம் பரப்ப வென்றே
மொட்டினை அதன்மேற் றூவி
மோகநா டழகு செய்தார் !

கண்ணுடி எங்கும் வைத்துக்
"கலவியின் போது பாதிக்
கண்ணுலே காண்க" வென்றும்
"களிக்கடல் மிதந்த பின்னர்
பெண்ணுளின் கைகள் ஊட்டப்
பெண்மன நிறத்துப் பாலை
உண்ணுமல் உண்க !" வென்றும்
உரைத்திலர் ; அமைத்தார் ;
சென்ருர் !

பூவையை முன்னர் தள்ளிப்
போயினர் பெண்டிர் ; பின்னர்
காவலன் தானே வந்தான்
காளையர் வழக்கம் போன்றே
ஆவலை வெளிக்காட் டாது
அடக்கிய படியே சாய்ந்து
பூவினை அவள்மேல் வீசப்
பூமுகம் புண்ணுய்ப் போகும் !

எப்படிப் பெண்மை பேசும் ?
எத்தனை நாளா னுலும்
கைப்பிடி நாதன் வந்து
கனிவுடன் அழைத்தா லன்றிக்
குப்புறக் கவிழ்த்த நாணக்
குகையைவிட் டகல்வ தில்லை !
இப்புகழ் தமிழர்க் கன்றி
எவர்க்குமே உலகி லில்லை !

நாழிகை கடந்தும் தீரா
நாணத்தை மணந்த பெட்டைக்
கோழிஅச் சேவல் காணக்
கொண்டில துள்ளம் ; வீர
வேழனே இடத்தை விட்டு
வேல்விழி அருகில் வந்து
தாழினைத் திறந்து சாய்ந்த
தலையையும் தூக்கி வைத்தான் !

தூக்கிய தலையும் கையின்
துணையிலே நிற்கும் ; நாணம்
போக்கிய பிறகும் ஏனே
பூவைதன் இமைகள் மூடும் !
திக்கிரை யாதல் போலும்
தினவுகொள் நெஞ்சன் தானே
பாக்கியைப் படிப்ப தாகப்
பாவையை அணைத்தான் மெல்ல !

தொட்டதும் துடித்த மேனி
துள்ளிய துணர்வின் கூத்து
கட்டறுத் தணையி லாது
கடந்தது காதல் வெள்ளம்
பட்டினைப் பழித்த பாவை
பழஉடல் மீது ஆண்கை
பட்டதும் இனைய மாற்றம்
படிந்தது ; அசையா நின்ருன் !

(தொடரும்)

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 2 ‖ 16—6—56 ‖ இதழ் 51

அட, என் லட்சிய வீரர்காள்!

இந்த லட்சியம் என்கிற வார்த்தை இருக்கிறதே, இதனுடைய உபயோகம் மிகப் பெரிது. பல அயோக்கியர்கள் எவ்வகையாலும் மூட முடியாத தங்களுடைய அயோக்கியத்தனங்களை மூடுவதற்கும், இந்த வார்த்தை பயன்படுகிறது. அழிந்துகொண்டு வரும் காங்கிரசிலிருந்து, அதிதீவிர வேகத்தில் அழுகிப்போன பொதுவுடைமைக்கட்சி வரை, நமக்கு எதிரான எல்லாக் கட்சியினரும் தங்களுக்கும் ஒரு லட்சியம் இருப்பதாகவும், அந்த லட்சியம் நம்முடைய லட்சியத்தைக் காட்டிலும் பல மடங்கு உயர்ந்ததென்றும், ஏதோ நம்முடைய லட்சியம் செல்லாத காசை மேலும் தேய்த்தெடுத்த லட்சியமென்றும், சொல்லிக்கொள்வதிலே பெருமைப்படுகிறார்கள். எல்லோருமே தங்களுடைய லட்சியங்களை நம்மோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய அவசியம் என்ன? ஒப்பீட்டு உவமைக்கு நம்முடைய கட்சியே நிற்பது எதைக் காட்டுகிறது? நாம் வளர்ந்துவிட்டோம். அந்த வளர்ச்சி அவர்களுக்கு நடுக்கத்தைத் தருகிறது. ஒவ்வொருவருடைய அடிவயிறும் கலங்குகிறது.

அதிலும், நமது மாநில மாநாடு நடந்துமுடிந்த பிறகு ஒவ்வொரு கட்சியினருக்கும் பேதி ஆகிறது. காங்கிரசுக்கு வாந்திபேதி; பொதுவுடைமைக் கட்சிக்குச் சீதபேதி; மற்றும் சில கட்சியினருக்கு 'பேதி மாதிரி'. காமராஜருக்கு வந்த பேதி திருச்சியிலே வெளிப்பட்டது. பொதுவுடைமையினருக்கு வந்த பேதி 'ஜனசக்தி'யிலே வெளிப்படுகிறது. சுருங்கச் சொன்னால் மாநாட்டின் எதிரொலி நாடெங்கும் கேட்கிறது. பேசாத வாயெல்லாம் பேசுகிறது. ஆச்சாரியாரைக் கழகம் ஆதரிக்குமோ, என்ற பயத்தில், காமராஜர் கதி கலங்குகிறார். காமராஜரைக் கழகம் ஆதரிப்பதாக ஆச்சாரியார் பயத்துடனேயே வெளியிடுகிறார். இந்த இரண்டு பேரையும் அனுதாபத்தோடு பார்த்துக் கழகம் புன்னகை புரிகிறது. எதையாவது பேசி, எதையாவது எழுதி, நம்முடைய செல்வாக்கைக் குறைத்துவிடலாம் என்று கருதுகிற அளவுக்கு ஏற்கனவே மங்கியிருந்த அவர்களது புத்தி, மேலும் மங்குகிறது. "தி. மு. கழகத்தின் பிரச்சாரம் வெளியாரின் தூண்டுதலாக இருக்குமோ" என்றுபேசுகிற அளவுக்கு எதிர்சாரியிலே 'சாம்பிராணி'கள் அதிகரித்திருக்கிறார்கள். ஒரு தகுதியும் இல்லாமல் பதவியைப் பிடித்துக் கொண்டிருப்பவர்களுக்குத்தான் நம்முடைய வளர்ச்சி அதிகக் கிலியைக் கொடுக்கிறது.

எது எப்படி இருந்தாலும், நாம் வளர்ந்திருக்கிறோம் என்பதை மட்டும் அவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். சற்றுத் தாமதித்துத்தான் உலகத்தைப் பார்த்திருக்கிறார்கள் என்றாலும், 'இப்போதாவது பார்த்தார்களே' என்று நாம் மகிழ்வோமாக !

★ ★ ★

மாநில மாநாட்டிலே தோழர் சம்பத் அவர்கள் சுவையாக ஒன்றைச் சொன்னார்; "அறிவுச்சூனியம் என்ற வார்த்தையை உபயோகிப்பது யாருக்காவது கடினமாக இருந்தால், அவர்கள் சுலபமாக ஒரே வார்த்தையில் 'காமராஜ்' என்று கூறிவிடலாம்."-இந்த வாக்கியத்தை அவர் சொன்னபோது, இது சரிதானா, முறைதானா, இப்படி அவர் சொல்லியிருக்கலாமா, என்று நம்மிலே சிலர் சந்தேகப்பட்டிருக்கலாமல்லவா? அந்தச் சந்தேகம் கூடாது என்பதற்காக, சம்பத் சொன்ன வார்த்தையைக் காமராஜரே நிரூபிக்கிறார் இப்போது. "நான் அறிவுச்சூனியம் மட்டுமல்ல, சூனியத்துக்கும் கீழே, 'அல்ட்ரா சூனியம்' (அதாவது அல்ட்ரா வயலட் மாதிரி)" என்பதை மிக மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டார். வாய் திறந்தால் துர்நாற்றம், வார்த்தை சொன்னால் முடைநாற்றம்-இது காமராஜரைப் பற்றி உலக மக்கள் கருத்து. இந்தக் கருத்தைப் பொய்யாமொழியாக்கி விட்டது அவருடைய பேச்சு. தட்சிணப் பிரதேசத்தை முன்னேற்றக் கழகத்தார் ஆதரிக்கிறார்களாம். அந்த யோசனை சொல்லும் காங்கிரஸ்காரர்களும் தி. மு. கழகத்தினரும் ஒன்றுதானாம். ஆகா! இவ்வளவு பெரிய 'அரசியல் ஞானியை' முதன் மந்திரியாகப் பெற்றதற்காக நான்கு நாட்கள் நாம் உபவாசம் இருப்போமாக!

காங்கிரசிலே சிலர் கோரும் தட்சிணப் பிரதேசத்திற்கும் தி. மு. கழகம் கேட்கும் தனி திராவிட நாட்டிற்கும், அடிப்படையில் உள்ள வேறுபாடுகள் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள், வெகு தெளிவாகப் பல இடங்களில் எடுத்துக்கூறி வந்திருக்கிறார்கள். அவரது விளக்கம், முழு மூடர்களுக்கும் புரியும். காமராஜருக்கும் புரிந்திருக்கவேண்டும். ஏனோ புரியவில்லை!

சமீபத்திலே மதுரையில் பேசும்போது சுருக்கமாக அண்ணா அவர்கள் சொன்னார்கள், "ஆச்சாரியார் கோரும் தட்சிணப் பிரதேசமும் மாம்பழந்தான்; தி மு. கழகம் கோரும் தனி திராவிட நாடும் மாம்பழந்தான். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்; அது மண்ணாலே செய்தது; இது மரத்திலே பழுத்தது" என்று.

டில்லியின் இரும்புப் பிடியிலே சிக்கிச் சீரழிய ஒரு பெரிய ராச்சியம் கேட்கிறார் ஆச்சாரியார். டில்லியின் தொடர்பில்லாத சுதந்திரத் தனி நாடு கேட்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். இரண்டும் ஒன்றுதான் என்று பேசுபவரை 'அறிவுச்சூனியம்' என்றழைக்காமல் வேறெப்படி அழைப்பது? புரியாதவர்களுக்குப் புரிய வைக்கலாம் எதையும்! ஆனால், புரியாததைப் புரிந்ததாக நடிப்பவர்கள் ஆபத்தான பேர்வழிகள். இப்படிப்பட்ட நடிகர்கள் அரசியலிலே நிறைய இருக்கிறார்கள். நாட்டிலே அப்பாவி மக்களும் இருப்பதால் இவர்களுக்கும் பிழைப்பு நடக்கிறது.

★ ★ ★

காமராஜர்தான் அப்படியென்றால் அனைத்தும் தெரிந்த ஆச்சாரியார் இருக்கிறாரே அவரும், தனது தள்ளாமை, இல்லாமை, இயலாமை அனைத்தையும் வெள்ளம்போல் திறந்துவிடுகிறார். சர்வோதயபுரத்திலே போய், 'ஆஸ்திகாளுக்கு, நாஸ்திகாளை'ப்பற்றிச் சொல்லுகிறார். தமிழ்ச்சங்கப் பொன்விழாவில் 'ஆரியாள் திராவிடாள்'பற்றிப் பேசுகிறார். படத்திறப்பு விழாவிலே தட்சிணப் பிரதேசம் பற்றி முழங்குகிறார். பொதுவாக "நானும் உலகத்தில் உயிரோடு இருக்கிறேன்" என்பதை இடைவிடாது காட்டிக்கொள்ளுகிறார். சர்வோதயபுரத்தில் அவர் பேசும்போது, 'நாஸ்திகர்கள் இந்த நாட்டிலே அதிகரித்துவிட்டார்களென்றும், காஞ்சியிலே அவர்கள் அதிகமாக இருக்கிறார்களென்றும், அவர்களெல்லாம் அரக்கர்களென்றும், அவர்களையெல்லாம் வினோபாஜி அழித்து 'துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம்' செய்ய வந்துள்ளாரென்றும், ஏதோ அவருடைய வருகைக்கு இவரே ஏற்பாடு செய்ததுபோலவும், அவருடைய கொள்கைகளை இவரே வகுத்துக் கொடுப்பது போலவும் - அளவு கடந்த பயத்தின் காரணமாக-திக்கித் திணறி விக்கி, விம்மி, முக்கி முணகிப் பேசித் தீர்த்திருக்கிறார்.

ஆச்சாரியார் தன்னை இராமாவதாரம் என்று அடிக்கடி சொல்லிக்கொள்ளுவது வழக்கம். அவர் இராமன் என்றால், நாம் அரக்கர்கள்தான். உலகத்திலேயே முதல் அரசியல் 'பேடி' இராமன்தான். இதை 'வாலி வதைப்படலம்' நமக்குச் சுத்தமாக எடுத்துக் காட்டுகிறது. இப்படி அரசியல் பேடிமையை முதல் முதலில் ஆரம்பித்து வைத்த இராமனின் மறு அவதாரமாக ஆச்சாரியார் இருக்கலாம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளக்கூடத் தயாராயிருக்கிறோம். ஏனென்றால், அதே பேடிமை ஆச்சாரியாரிடத்தில் முழு உருவம் கொண்டிருப்பதை நாம் காணுகிறோம். ஆனால், இந்த ராமாயணத்தில் 'செல்வாக்குச் சீதை' அரக்கர்களுக்குத்தான். வெற்றியும் அவர்களுக்குத்தான். காரணம் இது இராமாயணம் அல்ல, இராவணாயணம். ஆச்சாரியாரது வக்கிரபுத்தி இதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளவேண்டும். ஆஸ்திகம் என்றால் என்ன, நாஸ்திகம் என்றால் என்ன, என்பதுகூட இத்தனை வயதாகியும் இன்னும் அவருக்குத் தெரியவில்லையென்றால், அதை என்னென்று சொல்வது? அதற்கு நாம் பதில் சொல்லுவதற்கு முன்னால், வினோபாவே மறு கூட்டத்தில் சொல்லியிருக்கிறார். ஆச்சாரியார் சொன்னது தவறென்றும், எல்லாருமே உயர்ந்த கொள்கைகளைத்தான் கடைப்பிடிக்கிறார்களென்றும், தான் அண்ணாத்துரையைப் பார்க்க விரும்புவதாகவும் அதே கூட்டத்திலேயே அவர் வெளியிட்டார். இராமாயணத்திலே இராவணன் தங்கையின் மூக்கறுத்த இராமன், இங்கே வினோபாவிடம் மூக்கறுபட்டார். அந்தக் காயம் ஆறுவதற்கு முன்னதாகவே தமிழ்ச்சங்கப் பொன்விழாவில், "ஆரியர் திராவிடர் என்பதெல்லாம் ஆங்கில வரலாற்றாசிரியர்கள் எழுதி வைத்த கதை" என்றும், அதற்கு ஆதாரமே கிடையாதென்றும், ஒரு போடு போட்டார். அதற்கு வரலாற்று வல்லுநரும் தமிழ்ப்புலவருமான ஆ. கார்மேகக்கோன் அவர்கள் பதில் சொல்லும்போது, "ஓடும் ரயிலில் ஒருமணி நேரம் சரித்திரம் படித்தவர்களெல்லாம் சரித்திர ஆசிரியர்களுக்குப் புத்திகூற வந்துவிடுகிறார்கள்" என்றார். கூட்டத்தில் எழுந்த கையொலி ஐந்து நிமிடம் நீடித்தது. பிறகு ஆரிய திராவிட இனப்பிரச்சினை பற்றிக் கார்மேகக்கோன் அவர்கள் தெளிவாக விளக்கினார்கள். கூட்டம் ஆச்சாரியாரின் வரலாற்று ஞானம் பற்றிப் பேசியபடியே கலைந்தது. இனி அவர் அரசியலிலே செல்வாக்குப் பெறமுடியாது என்பதை இந்த இரு காட்சிகளும் நிரூபித்தன. இப்படி அறிவிலே தள்ளாமையும், பதவியிலே இல்லாமையும் தன் சாதிக்கு உதவிசெய்ய இயலாமையும் அவரைக் கொண்டுபோய் நிறுத்தியிருக்கும் இடம் பரிதாபத்திற்குரியதாக ஆகியிருக்கிறது.

★ ★ ★

அவர் போகட்டும்! பரம்பரையாகவே அவர் அப்படி! ஆனால் பரிதாபத்துக்குரிய நம்முடைய தோழர் ஜீவானந்தம் இருக்கிறாரே,

அவருடைய நிலைமைதான் கவலைக்கிடமாக இருக்கிறது. மாநில மாநாட்டிலே ''இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்'' என்பது பற்றித் தோழர் சம்பத் அவர்கள் பேசினார்களல்லவா? அதற்கு நாம் எதிர்பார்த்ததுபோலவே ஜீவானந்தத்தை விட்டுப் பதில் சொல்ல வைத்திருக்கிறது கம்யூனிஸ்டு கட்சி. தங்கள் லட்சியத்திலே தாங்கள் எவ்வளவு பெரிய வீராதி வீரர்கள் என்பதையும் அதே நேரத்தில் தி. மு. க. கொள்கை எப்படிக் குழம்பியிருக்கிறது என்பதையும் புட்டுப் புட்டுக் காட்டியிருக்கிறார் ஜீவானந்தம். புட்டுக் காட்டுவது, (தண்டவாளத்தை) பிடுங்கிக் காட்டுவது. (தந்திக்கம்பியை) அறுத்துக் காட்டுவது இதற்கெல்லாம் தனித் திறமைவேண்டும். அந்தத் திறமை தனக்கு இருப்பதாகத் தோழர் ஜீவானந்தம் நிருபிக்கிறார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைக் குழப்பத்தைப் பற்றிப் பேசிய தோழர் சம்பத் அவர்கள் மற்றக் கட்சிகளோடு கம்யூனிஸ்ட் கட்சியை ஒப்பிட்டுக் கொள்கைக் குழப்பத்தைக் காட்டவில்லையாம். அதாவது ''மற்றக் கட்சிகளெல்லாம் எங்களைவிட அதிகமாகக் குழம்பியிருக்கிறதே! நாங்கள் குழம்பியது கொஞ்சந்தானே! ஏனதை ஒப்பிட்டுக் காட்டவில்லை?'' என்று கேட்கிறார். உண்மையிலேயே நமக்குப் பரிதாபமாகத்தான் இருக்கிறது. ஆனால், தோழர் சம்பத் அவர்கள் அதனை ஒப்புநோக்கிப் பேசாமலிருந்தாரா என்றால், அதுவுமில்லை; பேசியிருக்கிறார். பண்டிதரின் கொள்கைக் குழப்பத்தைப் பகுத்துப் பகுத்துக் காட்டியிருக்கிறார். பண்டிதரின் குழப்பத்துக்குக் காரணம் என்ன, கம்யூனிஸ்ட் கட்சியின் குழப்பத்துக்குக் காரணம் என்ன, என்பதையெல்லாம் தெளிவாக விளக்கியிருக்கிறார். உண்மையைச் சொல்லப்போனால் அவர் விளக்கவில்லை என்பதல்ல ஜீவானந்தத்தின் கோபத்துக்குக் காரணம். தெளிவாக விளக்கிவிட்டாரே என்பதுதான். ஆண்டு வாரியாக கம்யூனிஸ்ட் கட்சியின் 'அந்தர்பல்டி', 'சம்மர் சால்ட்', 'லாங்ஜம்ப்', 'ஹைஜம்ப்' அனைத்தையும் அவர் எடுத்துக் கூறினார். என்றாலும் தோழர் ஜீவானந்தத்துக்குக் கம்யூனிஸ்ட் கட்சியின் உடல்நிலையிலே சந்தேகம் வந்துவிட்ட காரணத்தால் தி. மு. க. தலைமையின் வரலாற்று ஞானத்திலும் சந்தேகம் வந்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் ஒரு ஆண்டில்கூட கொள்கை கோணாமல் இருந்ததில்லை என்றாலும் ஐந்து ஆண்டுகளுக்கொரு முறை கோணிய பெருங்கோணல்களை மட்டுமே தோழர் சம்பத் காட்டினார். ஆணித்தரமான ஆதாரங்கள்! ஆம்! காதுள்ளவர்கள் கேட்டு, கருத்துள்ளவர்கள் சிந்தித்தால் உண்மையென ஒப்புக்கொள்ளக்கூடிய ஆதாரங்கள். ஆனால் தோழர் ஜீவானந்தம் அவர்கள், தோழர் சம்பத் ஆதாரமின்றிப் பேசிவிட்டதுபோல் முழங்குகிறார். கம்யூனிஸ்ட் கட்சியின் வெளிப்படையான நடவடிக்கைகளிலிருந்தும் எழுத்துக்களிலிருந்தும்தான் சம்பத் ஆதாரங்களை எடுத்தார். 'அண்டர் கிரவுண்ட்' ஆதாரங்கள் நிறைய இருக்கலாம். அது சம்பத்துக்குத் தெரிய நியாயமில்லையல்லவா? அதைக் காட்டாத காரணத்தாலே சம்பத்தின் ஆதாரம் ஆணித்தரமானதல்ல என்று கூறிவிட முடியுமா? வேறொரு சக்தியால் இயக்கப்படும் எந்த இயக்கமும் கொள்கைக் குழப்பத்தில்தான் வந்து நிற்கும். காரணம், இயக்குபவனுடைய பாடலுக்கேற்பத் தன் தாளத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் அந்த இயக்கத்துக்கு வந்துதான் தீரும். இயக்குபவன் மாறும் போது-வேறு இயக்குபவன் வரும்போது இந்தக் குழப்பம் உச்சக்கட்டத்தை அடையும். உதாரணமாகச் சொன்னால், ஸ்டாலின் காலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை, பிறகு மாலன்கோவ் வந்தபோது பாடிய புகழ்மாலை, மாலன்கோவ் வீழ்த்தப்பட்டபோது அதற்குக் காரணம் தேடியது, புல்கானின் வந்ததும் 'போற்றி, போற்றி' பாடியது, அவர் ஸ்டாலினைக் கொலைகாரன் என்றதும், 'திரு திரு'வென்று விழித்தது, புல்கானின் இந்தியாவுக்கு வந்த பிறகு தங்களது அரசியல் நடைமுறையைத் தலைகீழாக மாற்றிக்கொண்டது, முதலியவற்றைக் குறிப்பிடலாம். இப்படி ரஷ்யாவின் கால நிலைக்கேற்ப இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேகநிலை பாதிக்கப்படுவதைக் காணும்போது, தோழர் சம்பத் அவர்கள் அன்னிய சக்தியைப் பற்றிக் குறிப்பிட்டதில் தவறென்ன இருக்கமுடியும்? வேண்டுமானால் அந்தச் சக்தி தீவிர இடதுசாரிச் சக்தி என்பதை ஒப்புக்கொண்டு பேசலாமே தவிர, அப்படி ஒரு சக்தியோடு கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தொடர்பே இல்லை என்று நாம் சாதிக்கமுடியாது. காரணம் அது ஊரறிந்த ரகசியம்.

அன்றைக்குத் தோழர் சம்பத்தின் பேச்சை லட்சக்கணக்கான மக்கள் கேட்டார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். அது நாகரிகப் பேச்சாக இருந்ததே தவிர, அவதூறு பாணங்களை அள்ளி வீசுவதாக இல்லை. அவர் சொன்ன உண்மைகள் கசப்பாக இருப்பதால் அவதூறுகளாகத் தோன்றலாம். ஆனால் தோழர் ஜீவானந்தம் அவர்கள் குறிப்பிட்டிருப்பது போன்ற பல சொற்றொடர்களை அவர் உபயோகப்படுத்தவே இல்லை. அப்படி உபயோகப்படுத்தியிருந்தாலும் அது கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரைக்கும் தவறில்லையென்றாலும் அவர் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக ஏற்றுக்கொள்வது எப்படி? தங்களை சம்பத் நிறையத் திட்டிவிட்டதாகச் சொன்னால் பொதுமக்களது அனுதாபம் கிடைக்கும் என்ற தவறான கருத்திலே தான் தோழர் ஜீவானந்தம் பலவசை வார்த்தைகளைத் தானே ஆக்கிக்கொண்டு, தங்களுக்கே சமர்ப்பித்துக்கொண்டிருக்கிறார்.

•''இத்தனை வசைமாரிகளுக்கும் காரணம், தி. மு. க. மாநில மாநாடு நடந்துகொண்டிருந்தபோது கூடிய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு கமிட்டிக் கூட்டத்தில் பொதுத் தேர்தலைப் பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானந்தான்'' என்கிறார். உண்மைதான். ஆனால் ஒன்று; கேலிக்குரிய அந்தத் தீர்மானம் கம்யூனிஸ்ட் கட்சியைக் கிண்டல் செய்ய நம்மைத் தூண்டியதே தவிர, ஆத்திரப்பட்டு வசைபொழிய வைக்கவில்லை.

நாம் எந்த நேரத்திலும் எந்தக் காரணத்துக்காகவும் கம்யூனிஸ்ட் கட்சியைக் கூட்டுச் சேர்க்க வலிய விரும்பியதில்லை. பல முறை அவர்கள் நடந்தார்கள். தலைமை நிலையத்தை முற்றுகையிட்டார்கள். அண்ணாவிடம் குழைந்து குழைந்து பேசினார்கள். சென்ற பொதுத் தேர்தலிலேயே நாம் அதைக் கண்டோம். அந்த நேரத்திலே கூட தி மு. கழகம் அவர்களிடம் கேட்ட ஒப்பந்தம், ''திராவிட நாடு கோரிக்கையை நீங்கள் ஆதரிக்கவேண்டும்'' என்பதுதான். வெறும் ஆதரவைக் கொடுப்பதற்கே அந்தக் கொள்கையை மூல முதலாக வைத்த கட்சி, தன் ஆதரவை நாடி வந்தவர்களோடு கூட்டுச் சேருவதற்காக அந்தக் கொள்கையைக் கொன்றுவிட வேண்டுமென்று ஓர் தீர்மானம் கூறுமானால், அந்தத் தீர்மானத்தைப் பைத்தியக்காரர்களின் அபத்தமான் உளறல் என்பதைத் தவிர, வேறென்ன கூறமுடியும்? அவர்களே வந்தார்கள்; ஆதரியுங்கள் என்று கெஞ்சினார்கள்-அப்போது! அன்று இருந்ததைக் காட்டிலும் நம் செல்வாக்குப் பெருகியிருக்கிறது இப்போது. அதே நேரத்தில் அன்றிருந்ததைக் காட்டிலும் இன்று கம்யூனிஸ்ட் கட்சியின் பலம் குறைந்திருக்கிறது. ஓரளவு பலம் இருந்தபோது 'உதவுங்கள்' என்று ஓடிவந்தவர்கள், ஒரு பலமும் இல்லாதபோது 'நான் போடுகிறேன் நிபந்தனை' என்றால் அதை எள்ளிச் சிரிப்பதிலும் ஏனென்று கேட்பதிலும் என்ன தவறு? நம்முடைய மூலாதாரக் கொள்கையே திராவிட நாட்டுப் பிரிவினைதான். இதை ஒப்புக்கொள்ளாத தன் மனைவியைக்கூடச் சற்று ஒதுங்கிப்படு என்றுதான் கழகக்காளை சொல்வானே தவிர, அந்த இன்பத்துக்காகக்கூடப் பிரிவினை லட்சியத்தை அவன் மறந்துவிடமாட்டான். அரசியல் வர்ணக்கோமாளிகளுக்கு வேண்டுமானால் பிரிவினை கசக்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கு அதுதான் உயிர். தங்கள் காலத்திலேயே அதை நிறைவேற்றிப் பார்ப்பதுதான் அவர்கள் செய்துகொண்டிருக்கும் முடிந்த முடிவு. எது கிடைப்பதானாலும் அதை விடுவதில்லை இது உறுதி கொல்லைப்புறத்துக் கோபாலரோ, நீலமேக சியாமள வர்ணக் காமராஜரோ அவர்களுடைய சம்பள ஆட்களோ, கரையும் கம்யூனிஸ்ட் கட்சியினரோ எதிர்க்கிறார்கள் என்பதற்காக பிரிவினை லட்சியம் தவறென்று ஆகிவிடாது. கல்லடிபட்டு யானை சாவதில்லை. ஆம்! நமது பிரிவினை லட்சியத்தை இவர்கள் ஏதும் செய்துவிடவும் முடியாது. நம்முடைய தேர்தல் லட்சியத்தில் பிரிவினையே முதற்கொள்கையாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பொதுமக்களுக்கு அது ஒன்றும் கசப்பாக இல்லை. அதைச் சொல்வதாலே வாக்குத் தரமாட்டேன் என்று சொல்பவர்களும் இல்லை. கோழிமுட்டைக்குள்ளே குடியிருக்கும் காமராஜர்களுக்கும் ஜீவானந்தங்களுக்கும் வேண்டுமானால் இது பயங்கரமாகத் தெரியலாம். உலகெங்கிலும் சென்று அவதிப்படும் தமிழர்கள், தமிழகத்தில் இருக்கும் அவர்களது உறவினர்கள், அனைவரும் தனி திராவிட நாட்டை எதிர்பார்க்கிறார்கள். சிங்களவர்களின் காலடியிலே சிக்கித் தவிக்கும் திராவிட மக்கள் 'மனிதருள் மாணிக்கம், தங்களைப் பற்றி வாயே திறக்கவில்லையே, ஏன், என்று கேட்கிறார்கள். நமக்கும் அவருக்கும் உறவில்லை, அதனால்தான், என்று நண்பர்கள் பதில் சொல்லுகிறார்கள். அந்த ரத்தம் வேறு நம் ரத்தம்வேறு என்பதை அவர்கள் புரிந்துகொள்ளுகிறார்கள். ஐந்தாண்டுத்திட்டத்தின் அநீதி பற்றி ஆத்திரப்படுகிறார்கள். நான் இலங்கையில் பேசிய கூட்டங்களிலெல்லாம் பிரிவினை பற்றிக் குறிப்பிட்டபோது அங்கே பெருத்த கையொலி எழக் கண்டேன். அவர்களது அகமும் முகமும் மலரக்கண்டேன். பிரிந்தால் வாழ்வு கிடைக்கும் என்று பெருமிதம் அடையக் கண்டேன். ''பிள்ளையைத் தாய்தான் காப்பாற்றுவாள், அடுத்த வீட்டுக்காரிக்கு அதைப்பற்றி என்ன கவலை'' என்று அவர்கள் பேசிக்கொள்ளக் கேட்டேன். முதியவர்கள் சிலர் ''எங்களை எப்படியாவது அங்கே அழைத்துக்கொள்ளுங்கள்'' என்று கண்களில் நீர் பெருகச் சொன்னார்கள். ஆண்டாண்டுக் காலமாக ஆண்டு அனுபவித்து இன்று மாண்டு மடியும் தமிழினத்துக்குப் பிரிவினை தவிர வேறு கதி ஏது? புண்ணிலே மண்ணைப் போட்டு ஊதும் பொதுவுடைமைக்காரர்களின் கொள்கை அவர்களை எந்த அளவுக்குக் காப்பாற்றும்? தனிக் கோடிக் (தனுக்கோடி) கரையிலே தாய் நிற்கிறாள்; யாழ்ப்பாணக் கரையிலே மகன் கதறுகிறான். கேட்பார் இல்லையே அவர்களின் கேவல நிலைமையை! ஆளும் வடவரின் நாக்கு ஒருதரம்கூட அசையவில்லையே அவர்களுக்காக! ஆடவில்லையே அவர்கள் சதை! 'கொஞ்சம் பொறுங்கள் பார்க்கலாம்!' என்ற ஆறுதல் வார்த்தையும் இல்லையே! அப்படி ஒரு அவதி தமிழனுக்கு இல்லாதது போலல்லவா அவர்கள் நடந்துவருகிறார்கள்? சிங்களவர்களின் மிருகத்தனமான தாக்குதல் தமிழர்கள்மீது நடக்கும் இப்போதும்...எங்கே பண்டிதர்! இருக்கிறாரா? இறந்துவிட்டாரா? வாய்கொழுத்துப் பேசும்போது மட்டும் தமிழர்கள் நினைவு வந்தது. வசைபொழியும்போது உங்களைப் பற்றி நான் எவ்வளவு எழுதியிருக்கிறேன் என்று கூறத் தோன்றியது. கண்முன்னால் நடக்கும் அநீதிக்குப் பரிகாரம் தேட கருணை பிறக்கவில்லை அந்த சமாதானப் புறாவுக்கு. காரணம் என்ன? வடவர் நமக்கு வேண்டாதவர்கள். வேண்டாதவர்கள் என்பது மட்டுமல்ல, விரோதிகளுங்கூட. இந்தியா ஒரு நாடல்ல. இதன் ரத்த அடிப்படையே பலவகை. இதிலே பெரும் பிரிவுகள்

இரண்டுதான். ஒன்று ஆரியப்பகுதி, மற்றொன்று திராவிடத் தொகுதி. தமிழன் திராவிடத் தொகுதியினன், வடவர் ஆரியப்பகுதியினர். இதை அவர்களே மறுக்கமாட்டார்கள். காரணம், அவர்கள் ஆச்சாரியாரைப் போல வரலாற்றையே மறுப்பவர்கள் அல்ல. இந்திய உபகண்டத்தின் பல்வேறு கலை நிலைகளை ஆராய்ந்த மேனுட்டு ஆராய்ச்சியாளர்களும் இந்தியத்தின் வடபுலம் வேறு தென்புலம் வேறு, என்றுதான் குறிப்பிடுகிறார்கள். இந்த வரலாற்று ஆதாரங்களைக் கண்முன்னால் நிருபிக்கிறது, வடக்கு கையாண்டு வரும் கொள்கை. சுருங்கிய மதியினரும் சுலபத்தில் புரிந்துகொள்ளுமாறு பகிரங்கமாகவே இழைக்கப்படுகிறது தமிழனுக்கு அநீதி. இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கை ஒன்றுதான், தமிழனைக் கரை சேர்க்கும் கலமாகப் பயன்படுகிறது. அரசியல் லாப நட்டங்களைக் கணக்குப் பாராத எல்லா மக்களுக்கும், பிரிவினைதான் தேனாக இனிக்கிறது. ஆகவே, பிரிவினைக் கொள்கையைச் சொல்வதாலேயே தேர்தலில் நாம் தோற்றுப்போய்விடுவோம் என்று யாராவது கருதினால், ஒன்று, அவர்கள் நேற்றுத்தான் பிறந்திருக்க வேண்டும், அல்லது எதிலே தனக்குப் பயம் ஏற்படுகிறதோ அதைத் தனக்குத் தானே தெளிய வைத்துக்கொண்டு பிதற்றும் ஏமாளிகளாக இருக்கவேண்டும். காமராஜருக்கு இந்த இரண்டும் பொருந்தும். கம்யூனிஸ்டுகளுக்கு இதில் எது பொருந்தும் என்பதைப் பொதுமக்களே தீர்மானிப்பார்களாக. ஆனால், தோழர் ஜீவானந்தம், பிரிவினையை விட்டு விட்டு வாருங்கள் என்று போட்ட அபத்தமான தீர்மானத்தை மேலும் விளக்குகிறார். அந்தத் தீர்மானத்தைக் கிண்டல் செய்த சம்பவத்தைக் கண்டிக்க வந்த அவர், ஏன் பிரிவினை கூடாது என்று தீர்மானம் போட்டோம் என்பதற்குக் காரணமும் கூற வருகிறார். அதாவது இந்திய ஜனநாயக ஒற்றுமை அவசியமாம். அதனாலே தமிழ்நாட்டின் ஜனநாயகம் தழைத்தோங்குமாம். ஓங்கியதே கடந்த பத்து ஆண்டுகளில். குடும்பம் குடும்பமாகத் தமிழர்கள் செத்து மடிந்ததே இந்திய ஜனநாயக ஒற்றுமைக்காகத் தானே! ஜனநாயக ஒற்றுமை என்கின்ற பேத்தல் ஒரு முழுப்பகுதியின் கஷ்ட நஷ்டங்களை எப்படித் தடுத்து நிறுத்துமோ, அது அந்த குருஷேவுக்குத்தான் வெளிச்சம்!

கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு கமிட்டித் தீர்மானத்தில் திராவிட நாட்டுப் பிரிவினை வாதம் சீர்குலைவுத் தன்மை கொண்டதாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. நேருவின் கருத்துப்படியும் இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக்கொண்டுள்ளபடியும் மக்கள் சபையில் மூன்றில் இரண்டு பகுதியினர் ஒரு பகுதி சுயேச்சையாவதை விரும்புவார்களானால்', எந்த நேரத்திலும் பிரிந்துபோவதற்கு அந்தப் பகுதிக்கு உரிமை உண்டு. கம்யூனிஸ்ட் நண்பர்கள் கருத்துப்படி, பிரிவினை சீர்குலைவுக் கொள்கையாகுமானால் அரசியல் சட்டமே சீர்குலைவின் தாய் என்று ஆகவேண்டும். ஆனால் உண்மையில் சீர்குலைவு கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையிலும் அதன் உறுப்பினர்களின் சீர்குலைந்த உள்ளத்திலும் தான் இருக்கிறதே தவிர, பிரிவினையில் இல்லை.

பிரிவினையை விட்டுவிட்டால்தான் தி. மு. கழகம் ஜனநாயக இயக்கத்தில் ஒரு ஆக்க பூர்வமான பாத்திரத்தை வகிக்கமுடியும் என்று அவர்களது தீர்மானம் கூறுகிறது. இதை வாதத்துக்காகச் சரியென்று வைத்துக்கொண்டாலும், ஜனநாயக இயக்கத்தை ஆக்கப்படுத்துவதை, பிரிவினை எப்படித் தடுக்கும்? பிரிவினைக் கழகம் தன் பிரிவினைக் கொள்கையினாலே எப்படி 'ஜனநாயக ஆக்க பூர்வமான பாத்திரம் (!)' என்ற ஸ்தானத்தை இழந்துவிடும்? நமக்குப் புரியவில்லை! கம்யூனிஸ்டுக் காளியாயி, தானேதான் நமக்கு அதைப் புரியவைக்க வேண்டும். ஜனநாயகத் திட்டத்தின் முழுமை பெற்ற அங்கந்தான் பிரிவினை என்பது. தனிக் குடித்தனம் அமைக்கிற பிள்ளை, குடும்ப ஜனநாயகத்தின் விரோதியல்ல. தன் குடும்பத்திலே அவன் முறையான ஜனநாயகத்தை அமுல் நடத்துவான். இருதயம் பழுதடைந்தவர்களைத் தவிர வேறு யாரும் அதை ஜனநாயகம் அல்ல என்று கூறிவிடமாட்டார்கள். ஒரே இந்தியாவின் மாகாணமாகத் தமிழ்நாடு இருந்தால்தான் இந்திய ஜனநாயகத்தோடு தமிழ்நாட்டு ஜனநாயகம் செழித்தோங்க முடியுமென்று கூறுவது, நான்கு பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு சேலையைக் கட்டிக்கொண்டால்தான் நான்கு பேர் உடம்பும் தெம்பாக இருக்கும் என்று சொல்வதற் கொப்பாகும். ஜீவானந்தங்களைக் காட்டிலும் தி. மு. கழகத்தாருக்கு ஜனநாயகத்தைப் பற்றி அதிகம் தெரியும். ஜனநாயகமும் பிரிவினையும் ஒன்றுக்கொன்று எதிர்மாறானவை என்று அரசியலறிவு கொஞ்சம் உடையவர்கள்கூட நம்பமாட்டார்கள். ஏதோ ஜீவானந்தம் நம்புகிறார்.

அந்த நம்பிக்கையோடு அபத்தமான பல விளக்கங்களை மேலுமவர் தருகிறார். கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகள் கழுதையின் கால்களைப் போல் முட்டி தட்டுவதல்ல என்று சாதிக்க முயல்கிறார். அதோடு, முன்னேற்றக் கழகத்தின் கொள்கைக் குழப்பத்தைப் பூதக்கண்ணாடி வைத்துக் கண்டுபிடிக்கிறார். ஆம்! அவரைத் தவிர வேறு கோமாளிகளுக்கு அது வராது! ஸ்ரீலஸ்ரீ குருஷேவ் மகாசந்நிதானத்தின் கட்டளைத் தம்பிரானும் ஜீவானந்த அடிகள் மேலும் கிண்டிய கிண்டலையும் கிளறிய கிளறலையும் பிறகு கவனிப்போம்.

—கண்ணதாசன்.

இவர்

இவரை நேரிலே பார்த்தால் யாரும் அரசியல்வாதியென்று சொல்லமுடியாது. தீர்த்தக்கரைகளிலே உட்கார்ந்திருக்கும் தொப்பை தாங்கிகள் போன்ற உருவ அமைப்பு அவருக்கு. பார்வைக்குப் பசுபோல் இருப்பார்; பேச்செல்லாம் விஷம்! ஆனால் பெயருக்கேற்ற உருவம். காந்திக் குல்லாயை எடுத்துவிட்டு, சம்பூர்ண இராமாயணத்திலே (நாடகம்) வரும் கிரீடங்களிலே ஒன்றை இவர் தலையிலே மாட்டி ஐயங்காரைப் 'பள்ளிகொள்ள'ச் செய்து பார்த்தால் அந்த ஆனந்தசயனக் காட்சி அனந்தசயன அய்யங்காரை ஒரு குணசித்திர நடிகராக்கிக் காட்டும். வேஷப்பொருத்தம் பிரமாதமாக இருக்கும்.

வெள்ளையர் காலத்தில், காங்கிரஸ்காரர்கள் எங்கெங்கோ கிளர்ச்சி செய்ததாகச் சொல்கிறார்களே, அந்தப் 'புரட்சி'களில் அய்யங்கார் எந்தெந்த ஊர்களில் கலந்துகொண்டார், என்ன 'புரட்சி' செய்தார் என்று யாருக்கும் இதுவரை தெரியாது போலும்! ஏனென்றால அவர் ரகசியப்புரட்சி செய்வதிலே 'மகா புத்திசாலி'!

எதைப்பற்றியும் யோசிக்காமல், திடீரென்று ஒரு 'புஷ்வாண'த்தை விட்டுவிட்டு அவதிப்படுவோர் தென்னாட்டு அரசியலில் இன்னும் தலைதூக்கி நிற்கிறார்கள் என்றால் அந்த வெத்துவேட்டுகளின் தலைவர் அனந்தசயனமய்யங்காராகத்தானிருக்க முடியும். டில்லியிலே அவருக்கு மணி அடிக்கிற உத்தியோகம்!—கோயிலிலே அல்ல! மோட்டார் போக்குவரத்து உள்ள இடங்களில் ஒரு கையால் 'ஸ்டாப்' சொல்லி இன்னொரு கையால் 'ரைட்' கூறும் போலீஸ் பீட்போல, டில்லிப் பாராளு மன்றத்திலே மேஜை மணியைத் தட்டித் தனக்குள்ள அதிகாரத்தின் பெயரால் உறுப்பினர்களை உட்காரவைக்கும் 'சபாநாயகர்' அவர். கட்சிச் சார்பற்ற அந்தப் புனிதமான பதவியில் அவர் இருக்கிறார்? அவர் தமிழ்நாட்டுக்கு வரும்போதெல்லாம் டில்லியிலேயே 'ஒரு பேருண்மை'யைத் தயாரித்துக்கொண்டுதான் புறப்படுவார். அதுவும் அந்தக் 'கண்டுபிடிப்பு' தி. மு. கழகத்தைப்பற்றியதாகத் தானிருக்கும். அவர் அய்யங்காரல்லவா! கண்ணும் கருத்தும் வேறு யார் மீது இருக்கும்? அதுவும் அரசியலிலே சம்பந்தப்பட்டவரல்லவா இவர்?

அரசியலிலே சம்பந்தப்பட்ட 'அவர்களு'க்கு நம்மீதும், ஆச்சாரத்திலே பற்றுக் கொண்டோருக்குப் பெரியார் மீதும் எரிச்சல் இருக்கிறது. அவர்களை ஏமாற்றுக்காரர்களென நாம் ஒதுக்கித் தள்ளுவோம். ஆனால் அனந்தசயனமய்யங்கார் ஒதுக்கித் தள்ளப்படவேண்டியவர்தானா? பொறுப்புள்ள பதவியிலிருந்து கொண்டு சாரமற்ற பேச்சுக் கச்சேரி நடத்துகிறாரே என்பதுதான் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது.

முன்பு ஒரு தட்டவை, தலைநகரத்தை பெங்களூருக்கு மாற்ற வேண்டும்; அப்போதுதான் தென்னாட்டை வசப்படுத்த முடியும் என்றார். அநியாய புத்திசாலியாக இருக்கிறாரே என எண்ணிச் சிரித்து, அரசியல் சட்டத்தை மாற்றாதவரை தலைநகரத்தைத் தூக்கி கன்னியாகுமரியிலே போட்டாலும் தமிழ்நாட்டின் ஒத்துழைப்புக் கிடைக்காது என்று திட்டவட்டமாக நாம் தெரிவித்துவிட்டோம்.

பிறகு கொஞ்ச நாள் கழித்து சென்னைப் பக்கம் வந்தார். புண்ணியக் கதையாம் இராமாயணம் வெள்ளைக்காரர்களால் சிதைக்கப்பட்டது—என்றார். பண்டிதர்கள் சிரித்தார்கள் இக்கூற்றுக் கேட்டு. புதிதாக ஏதாவது சொல்லவேண்டும் என்பதற்காக 'புத்திசாலி'த்தனமாக இப்படிப் பேசிவிட்டுப் போகிறார்கள். இராமாயணத்திற்கும் வெள்ளைக்காரர்களுக்கும் என்ன தகராறு? இது அனந்தசயனமய்யங்காருக்குத் தெரியும் — ஆனாலும் 'ஸ்டண்ட்' ஏதாவது செய்யவேண்டுமே! அய்யங்காரின் தமிழ்நாட்டுத் 'திக்விஜயம்' வெளியிலே தெரியவேண்டுமானால் இப்படி ஒரு 'அபூர்வக் கண்டுபிடிப்பை'ச் சொல்லித்தானே ஆகவேண்டும்!

அய்யங்கார் இப்போது ஒரு புதுக் கரடி விட்டிருக்கிறார். குளிர்ச்சியான இமயமலையின் அடிவாரத்திலிருக்கும் 'டில்லிவாசி' ஏன் இப்படிப் பேசுகிறார் என்று டாக்டர்களே சந்தேகப்படுமளவிற்கு இந்த வாரம் சென்னையில் 'திருவாய் மலர்ந்த'ருளியிருக்கிறார். பாவம்! பரிதாபப்படுவோம் அந்தப் பழம் நெஞ்சினரின் போக்குக் கண்டு.

வெளி நாட்டிலிருந்து நமக்கு உதவி கிடைப்பதாக அவர் சந்தேகப் படுகிறாராம்! காங்கிரசிலே உள்ளவர்களே கைகொட்டிச் சிரிக்கிறார்கள், 'என்ன அய்யங்கார் அளக்கிறார்!' என்று. அய்யங்காரின் நினைப்பு, 'தமிழ்நாட்டுக்காரர்களுக்கு காங்கிரஸ் என்றால் அபார பக்தி; எனவே இவர்களைத் துரோகிகள் என்று கதை கட்டிவிடலாம்' என்று. அவர் என்ன செய்வார்? மே 20ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் எதிரொலி இப்படியெல்லாம் அவரைப் பேசச் சொல்கிறது! மிஞ்சிக்கொண்டு போனவர்களெல்லாம் அஞ்சி அஞ்சிச் சாகும்போது, இந்த 'சயனங்கள்' எந்த மூலைக்கு?

இனி அய்யங்கார் அடிக்கடி வந்து போகக் கூடும். நாமும் அடிக்கடி சிரிப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும். "ஜின்னா சாகவில்லை. அவர் தமிழ் நாட்டில் இருக்கிறார் என்று சந்தேகிக்கிறேன்" என்பார்.

★

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

28

இந்திராவின் முகத்தில் ரத்தம் தெறித்து முகமே செந்நிறம் கொண்டு விளங்கிற்று. சுந்தரமும் சாரதையும் பெற்ரேரும் "கமலம், கமலம்" என்று கதறினூர்கள். ஆம்! ஆட்டை வெட்டும்போது குறுக்கே விழுந்தது கமலம்தான்! கூட்டம் திசை தெரியாது ஓடிற்று. பூசாரி நடு நடுங்கிப் போனுன். கமலத்தின் தலையும் உடலும் தனித்தனியே துடித்துக்கொண்டு கிடந்தன. சாரதையும் இந்திராவும் மூர்ச்சையானுர்கள். மங்கையர்க்கரசி பைத்தியம் பிடித்தவள்போல் கதறினுள். சில விஞடிகளில் புதிய கூட்டம் கூடிவிட்டது அங்கே. தான் பலியானதன் காரணத்தைக் கூறமுடியாத கமலத்தின் அழகு முகம் பலரது கண்களிலும் கண்ணீரை வர வழைத்தது. சிறிது நேரத்தில் நீலவாகனம் வந்து நின்றது. போலீஸ்காரர்கள் பட பட வென்று இறங்கினுர்கள். கமலத்தின் பலியால் தான் தப்பித்துக் கொண்ட கடா ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தது. போலிசார் பூசாரியைக் கைது செய்தார்கள். குறிப்புக்கள் எடுத்துக் கொண்டபின், கமலத்தின் தலையையும் உடலையும் நீலவாகனத்தில் ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்குச் சென்ருர்கள். இப்போது மங்கையர்க்கரசியும் மூர்ச்சையுற்ருள். சின்னப்பரும் சுந்தரமும் புழுவாய்த் துடித்தார்கள். மூர்ச்சையுற்றுக் கிடந்த இந்திரா முனக ஆரம்பித்தாள். கூட்டத்திலிருந்த பெண்கள் இந்திரா சாய்ந்துகிடந்த இடத்தைச் சுற்றி நான்கு சேலைகளைத் திரையாகப் பிடித்துக்கொண்டார்கள். அதிர்ச்சியில் இந்திரா அங்கேயே ஒரு பெண் குழந்தையைப் பிரசவித்தாள். கூட இருந்த பெண்கள் அவளுக்கு வேண்டிய சிகிச்சைகள் செய்தார்கள். இரண்டுபேர் ஓடி மூன்று கார்களைக் கொண்டு வந்து இந்திராவும் குழந்தையும் உட்பட எல்லோரையும் தூக்கிக் கொண்டு சாரதையின் பிறந்தவீட்டுக்குச் சென்ருர்கள். கோட்டையூர் முழுவதும் அன்று அங்கு கூடியிருந்தது. ஊரே அதைப் பற்றித்தான் பேசிற்று. அந்தக் குடும்பத்தில் எல்லோருமே அதிர்ச்சி அடைந்துபோயிருந்தார்கள், பிரசவித்த இந்திரா மயங்கிக்கிடந்தாள். வீடு ரணகளப்பட்டது. "கமலம், கமலம்" என்றே எல்லோரும் கதறினூர்கள். அக்காளின் ஆனந்தத்திலேயே தன் வாழ்வு அடங்கியிருக்கிறது. என்று கருதிய அந்த அன்பின் செல்வி அத்தனை பேரையும் விட்டு விட்டு மடிந்து விட்டாள். நெறி இழந்த பின்பு வாழ்வு எதற்கு என்று எண்ணிய அந்தத் தமிழணங்கு, "இது தான் தனக்கு நியாயமான முடிவு' என்று எண்ணியபடியே பலியானுள். அந்தக் குடும்பத்தில் எல்லோருக்கும் அன்று சுயநினைவு வர வெகுநேரம் பிடித்தது.

கமலத்தின் பிணத்தைக் கொடுக்கப் போலீசார் மறுத்து விட்டனர். கவிஞர்களின் கவிதைகளையெல்லாம் தனக்குள் அடக்கிக்கொண்டிருந்த அந்த மெல்லிய உடலை-அழகிய வடிவத்தை அந்தக் குடும்பத்தினர் மீண்டும் காணவேமுடியவில்லை. களங்கத்தை ரத்தத்தால் துடைத்து விட்டு, கமலம் மறைந்துவிட்டாள்.

அன்றே பாலனுக்குத் தந்தி கொடுக்கப்பட்டது.அன்று இரவு வெகுநேரத்துக்குப் பிறகு, பிரசவக் களைப்பில் இருந்த இந்திரா கண்விழித்தாள். இப்போது அவளது சித்த மயக்கம் தெளிந்திருந்தது. பழைய இந்திராவாக இருந்தாள். எல்லோர் முகங்களும் அழுதழுது வீங்கியிருப்பதைக் கண்டாள். "என்ன நடந்தது" என்று கேட்டாள். சாரதை அவள்மேல் விழுந்து, "கமலம் போய்விட்டாள்" என்று கதறினுள். பலவீனமான நிலையிலிருந்த இந்திரா தாளாத மேனியை அழுதழுது நோக வைத்தாள். மறு நாள் காலையில் பாலன் வந்து சேர்ந்தான். வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாகக் கதறினுன். ஓடிப்போய்ச் சுந்தரத்தின் கால்களிலே விழுந்தான். சுந்தரம் அவன் தோள்களைப் பிடித்துத் தூக்கித் தானும் அழ ஆரம்பித்தான். இந்திரா பிரசவ அறையிலிருந்து தள்ளாடியபடி எழுந்துவந்தாள். பாலன் தடாரென்று அவள் கால்களிலே போய் விழுந்தான். கமலத்தைத் தொட்டபோது அவன் சாதாரணக் குற்றவாளியாக இருந்தான். கமலத்தின் தற்கொலை அவனைப் பயங்கரக் குற்றவாளியாக்கியது. மன்னிப்புக்காக அவன் மன்ருடினுன். யாருடைய கால்களிலே விழவும் அவன் தயாராயிருந்தான்.கிரீடம் சுமந்த தலைபோல நிமிர்ந்திருந்த அவன், நாலுபேர் கூடித் தன்னை உதைத்தாலும் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்தான். இந்திரா மெதுவாக அவன் கைகளைத் தொட்டாள். பாலன் எழுந்தான். "இந்திரா! என்னை மன்னித்துவிடு! எல்லாவற்றிற்கும் இந்தப் பாவிதான் காரணம்" என்று கெஞ்சினுன். இந்திராவின் கண்களிலே கண்ணீர் ததும்பி நின்றது. அந்தக் கண்ணீரிலே இரண்டு வித உணர்ச்சிகள் பிரதிபலித்தன. தங்கை போய்விட்டாளே என்ற துக்கம் ஒன்று, போன தங்கைதான் தன்னை வாழவைத்தாள் என்ற மகிழ்ச்சி ஒன்று. ஆம்! பாலன் இனி அவள் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான்!

நாட்கள் நடந்தன. அந்தக் குடும்பத்திலே துக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. கமலத்தின் படத்துக்கு மாலையிட்டு எல்லோரும் வணங்கி எழுந்தார்கள்.

வேலங்குடியிலே திருவிழா சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட்டது. காளியாத்தாள் நிரந்தரமாகச் சிறைப்படுத்தப்பட்டாள். கமலத்தின் பலி இந்திராவை வாழவைத்ததோடு ஏராளமான கடாக்களுக்கும் உயிர்ப்பிச்சை அளித்தது. கமலத்தின் நினைவில் சின்னப்பர், சொக்கப்பர் இருவரது குடும்பங்களிலும் புது மலர்ச்சியை ஏற்படுத்தி வைத்தது. இந்திரா ஒருநாள் "குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம்" என்று கேட்டாள் பாலனிடம். அப்போது அங்கே வந்த சாரதை, "கமலம் என்று வையுங்கள்" என்ருள். பாலனின் கண்களிலே நீர் நிரம்பியது. சாரதை மறுபுறம் நடந்தாள். இந்திரா பாலனின் மார்பிலே சாய்ந்தாள். அவள் கையிலே பெண் குழந்தை சிரித்தபடி இருந்தது. அந்தச் சிரிப்பிலே பாலனின் களங்கம் முழுவதும் விலகியது. இந்திராவின் பெருநோய் அவன் கண்களுக்குத் தோன்றவே இல்லை. அவர்களது வாழ்க்கைப்படகு இன்பநதியிலே பயணம்தொடங்கிற்று.

அருகிலேயே ஒரு படகு வருகிறது. அதிலே யார் இருக்கிருர்கள்? ஆம்! சாரதையும் சுந்தரமும் காற்றுக்குக்கூட இடந்தராமல் கட்டிப் பிணைந்திருக்கிருர்கள். அந்த ஆண்டில்தான்,

......அவர்கள் வீட்டிலே திருவிழா ஆரம்பித்தது.

......வேலங்குடித் திருவிழா நின்றது.

முற்றும்.



முன்னுரை

மனிதன் என்பவன் பிரச்சினைகளால் உந்தப்படுகிற பந்து; அன்ருட வாழ்விலே ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு வகையான பிரச்சினை. மனத்தின் குரங்குத்தனம், அவ்வற்றில் சிறியதைப் பெரியதாகவும், பெரியதைச் சிறியதாகவும் காட்டி மனிதனைப் படாதபாடு படுத்துகிறது. இவற்றிலிருந்து விடுபட்டு ஏகம் சமநிலை என்ற ஒரே சீரான வாழ்க்கையை அடைந்தவர்கள் மிகச் சிலரே. அவர்கள் போக, மற்றவர்களுக்கு வழி காட்டுவதுதான் இந்தத் தொடர் கதையின் நோக்கம்.

"எப்போதும் மகிழ்ச்சிகரமாக இருப்பது எப்படி" என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புபவர்கள் இந்தக் கதையைத் தொடர்ந்து படிப்பார்களாக.

"துன்பங்களிலிருந்து விடுதலை கிடைக்காதா" என்று ஏங்குபவர்கள் அந்த விடுதலைப் பாதையை இதிலிருந்து பெறலாம்.

நான் அனுபவத்தில் கண்ட பல உண்மைகளையே கற்பனை கலந்து சித்தரித்திருக்கிறேன். இந்தக் கதையில் வரும் எந்தப் பாத்திரத்தையாவது பார்த்து "இது நாமாக இருக்குமோ?" என்று யாராவது சந்தேகப்பட்டால், அதற்கு நான் பொறுப்பாளியல்ல. பலவகைப்பட்ட கதா பாத்திரங்கள் வரும்போது அதில் நீங்களும் இருக்கலாம், நானும் இருக்கலாமல்லவா? நீங்கள் இருக்கிறீர்களோ இல்லையோ, நான் இருக்கிறேன். ஆனால் ஒன்று; இதில் வரும் ஒரே ஒரு சம்பவத்தைத் தவிர பாக்கி சம்பவங்கள் அனைத்தும் கற்பனைதான். பாத்திரங்களின் தத்துவங்களும் குண அமைப்பும் ஓரளவுக்கு என் அனுபவத்தோடு தொடர்பு கொண்டவை. ஆனால் இதில் வரும் எல்லாப் பாத்திரங்களுமே உயிரோடு உலவுவோரின் உருவகங்களாக இருக்கும் என்று எண்ணிக்கொண்டு, யாரும் படிக்க வேண்டாம். எள்ளுக்குள்ளே எண்ணெய் இருக்கிறதென்பதற்காக எள்ளே எண்ணெய்தான் என்று கூறிவிட முடியாதல்லவா? நிற்க.

இந்தக் கதையில் வரும் நல்லதம்பி, சூடாமணி, சீதா, கோமளம், சரசு ஆகியோர் உங்கள் சிந்தனைக்கு வேலை கொடுப்பதாக நீங்கள் கருதினுல், நான் எடுத்துக்கொண்ட வேலையை ஒழுங்காகச் செய்துவிட்டேன் என்று பெருமைப் படுவேன்.

1945-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், ஒருநாள். சென்னை வண்ணையம்பதியிலே அன்றைக்குப் பெருங் கூட்டம். ஆகஸ்ட் கலவரத்திலே ஈடுபட்டு, சிறை சென்ற தியாகி தேசானந்தர் அன்றுதான் சிறையிலிருந்து விடுதலை பெற்ருர். பத்திரிகைகள் அந்தச் செய்தியைக் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்திருந்தன; மாலை வண்ணையம்பதியிலே நடைபெறும் கூட்டத்தில் அவர் பேசுவதாக முடிவாகியிருந்தது. வீதி நெடுகத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. தேசானந்தரின் தீரம் பற்றியும், அவர் தண்டவாளத்தைப் பிடுங்கும்போது காலிலே துப்பாக்கியால் சுடப்பட்டது பற்றியும், அன்றைக்குப் பிடித்துச் சிறையிலே தள்ளப்பட்டவர் மூன்று முழு ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது விடுதலையானதுபற்றியும், பொது மக்கள் தங்களுக்குத் தெரிந்தவற்ருேடு கற்பனையையும் கலந்து பேசிக்கொண்டிருந்தார்கள். தெருவுக்குத் தெரு அதுவே பேச்சாக இருந்தது. பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திடலிலும் பெருங் கூட்டம் கூடியிருந்தது. மூன்று ஆண்டுகள் சிறையிலிருந்து வெளி வந்திருப்பவரின் குரல் எப்படியிருக்கும் என்பதை அறிவதற்காகவே பல பேர் அங்கு வந்திருந்தார்கள்.

சுமார் ஆறு மணிக்கெல்லாம் தேசானந்தர் திறந்த காரில் அழைத்து வரப்பட்டார். 'தேசானந்தருக்கு ஜே' என்ற கோஷம் வானைப் பிளந்தது. தேசானந்தர் மக்களைப் பார்த்துக் கைகூப்பி வணங்கியபடியே திடலை அடைந்தார். தேசானந்தர் என்ற பெயரைக் கேள்விப்பட்டு, ஐம்பது வயதுக்குக்குறையாதவராக இருப்பார் என்று கற்பனை செய்திருந்த பலரின் முகங்கள், வியப்புக் குறியைச் சுமந்தன. ஆம்! தேசானந்தர் என்ற புனை பெயரைச் சூடிய தியாகராசருக்கு இருபத்தெட்டு வயதுதான் ஆகியிருந்தது. அந்த வயதிற்கேற்ற களையும், அழகும் அவர் முகத்திலே பொங்கி வழிந்தன. சிறை அவரைச் சிங்கார மனிதராக ஆக்கிவைத்திருந்தது. துல்லியமான வெள்ளைக் கதராடை அணிந்திருந்தார். தலையிலே வெள்ளைக் குல்லா; நெற்றியிலே சந்தனப் பொட்டு – இந்த அலங்காரங்கள் அவரது அழகுக்கு மேலும் அழகு செய்தன.

மேடைக்கு வந்து அமர்ந்தார் தேசானந்தர். தபால் நிலையத்தைக் கொளுத்தி ஒன்றரை ஆண்டுகள் சிறையிருந்து வெளிவந்த சங்கரமூர்த்தி தலைமை வகித்தார். அவர் தமது முன்னுரையில் தேசானந்தரைப் பலபடப் பாராட்டினுர். தேசானந்தர் தமது இருபத்தைந்தாவது வயதிலே, தனது இளம் மனைவியையும் இரண்டு குழந்தைகளையும், அவரையே நம்பியிருந்த அவர் சகோதரியையும் விட்டுவிட்டு, தேச நலனுக்காகத் தீரப் போர் புரிந்து சிறை சென்றதைப் பற்றித் தலைவர் சங்கரமூர்த்தி பிரமாதமாக வர்ணித்தார். பிறகு தேசானந்தர் பேச எழுந்தார். ஒலி பெருக்கி அருகிலே வந்து நின்ருர். "கனம் அக்ராசனர் அவர்களே!" என்று ஆரம்பித்தார். அவரது தொண்டை கம்மிற்று. வார்த்தைகள் வேலைநிறுத்தம் செய்தன. ஆனுலும் சமாளித்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்: "நான் சிறைக்குப் போனதுபற்றி ரொம்ப மகிழ்ச்சி. நீங்கள் பாராட்டுகிறீர்கள். நான் தேசம் போனது ஜெயிலுக்காக... ஊம்...நான் ஜெயிலுக்குப் போனது தேசத்துக்காக. எல்லோரும் ஜெயிலுக்குப் போனுல் தேசத்துக்கு சுதந்திரம் கிடைத்துவிடும், அக்ராசனர் சொன்னதுபோல. நான் என் இளம் மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் சகோதரியையும் தவிக்க விட்டுவிட்டுத்தான் ஜெயிலுக்குப் போனேன். எனக்குப் பதினெட்டு வயதிலேயே திருமணம் ஆகிவிட்டது. ஒரு ஆண் குழந்தை, பெயர் கண்மணி. ஒரு பெண் குழந்தை, பெயர் அன்னிபெஸன்ட். 'அன்னி அன்னி' என்று அன்பாகக் கூப்பிடுவோம். என் மனைவியிடத்தில் எனக்கு அன்பு அதிகம். இருந்தாலும் தேசத்துக்காக அவர்களை எல்லாம் பற்றிக் கவலைப்படாமல் நான் ஜெயிலுக்குப் போனேன். எப்படியும் நாம் சுதந்திரம் அடைந்தே தீருவோம். ஜெய் ஹிந்த்! வந்தே மாதரம்!"

தேசானந்தர் முடித்தாரோ இல்லையோ, கூட்டத்தில் சலசலவென்று சப்தம் எழுந்தது. கூட்டத்தில் இருந்தவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் குழந்தை குட்டிகளைப் பத்திரமாய் அழைத்துக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டார்கள். ஒரு மணி நேரம்கூட அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பிரிந்திருக்க விரும்பவில்லை என்பதை அது நிரூபித்தது.

அன்றைய இரவே தேசானந்தர் தமது ஊரான மேலூருக்குப் புறப்பட்டார். இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ் மூலம் காரைக்குடி போய் இறங்கி, அங்கிருந்து பஸ்ஸில் மேலூர் போவதாக ஏற்பாடு. சென்னை எழும்பூர் புகை வண்டி நிலையத்தில் அவரது கட்சியினரும் நண்பர்களும் கூடி அவரை வழி அனுப்பி வைத்தார்கள். புகைவண்டி புறப்பட்டபோது அவசர அவசரமாக ஒரு பெண் ஓடி வந்து தேசானந்தர் இருந்த முதல் வகுப்புப் பெட்டிக்குள் ஏறிக்கொண்டாள். பின்னுலேயே 'போர்ட்டர்' ஒரு பெரிய டிரங்குப் பெட்டியைக் கொண்டு வந்து வைத்துவிட்டுப் புகை வண்டியோடு ஓடி, கூலியைப் பெற்றுக்கொண்டு திரும்பினுன். வெளியே தலையை நீட்டி நண்பர்களைப் பார்த்துக் கையாட்டிக் கொண்டிருந்த தேசானந்தர், நண்பர்கள் தலை மறைந்ததும் பெட்டிக்குள் தலையை இழுத்துக் கொண்டார். அவருக்கு எதிர்த்த படுக்கையில் ஏற்கனவே ஒரு பெரியவர் காலை நீட்டிப் படுத்திருந்தார். அந்தப் பெட்டியில் இரண்டே படுக்கைகள்தான். அதனுல் உட்காருவதற்கு இடமில்லாமல் அந்தப் பெண் நின்றுகொண்டிருந்தாள். அவள் முகம் வெளிறி இருந்தது. அதிகக் களைப்போடு காணப்பட்டாள். உடம்பிலே இரத்தம் இல்லை என்பதற்கான அறிகுறியை அவள் தோற்றத்தில் படிந்திருந்த சோகை படம் பிடித்துக் காட்டியது தேசானந்தருக்கு. அவள், கீழே விழுந்துவிடாமல் இருப்பதற்காகப் பெட்டியின் ஓரத்திலே சாய்ந்திருந்தாள். அந்தப் பரிதாபத்தைக் காணச் சகிக்காமல் தேசானந்தர் கொஞ்சம் விலகி உட்கார்ந்துகொண்டு, "உட்காருங்கள் அம்மா!" என்று இடம் கொடுத்தார். அந்தப் பெண் தள்ளாடித் தள்ளாடி அவருக்குச் சற்றுத் தூரத்தில் வந்து அமர்ந்தாள். சற்று நேரம் அமைதி நிலவியது. வண்டி தாம்பரத்தை அடைந்தபோது, தேசானந்தரின் குரல் அந்த அமைதியைக் கிழித்தது. "எங்கே போகிறீர்கள்!" என்ருர், அந்தப் பெண்ணைப் பார்த்து. "திருச்சி" என்று பதில் சொல்லிவிட்டுத் திருப்பிக் கொண்டாள் அந்தப் பெண்.

"திருச்சிதான் சொந்த ஊரா?"

"ஆமாம்."

"சென்னைக்கு எதற்கு வந்தீர்கள்?"

"சொந்தக்காரர்கள் இருக்கிருர்கள்"

தேசானந்தர் கேள்விகளை நிறுத்திக் கொண்டார். மீண்டும் அங்கே அமைதி நிலவியது; ஆனுலும் எதாவது பேசிக்கொண்டே இருக்க வேண்டும்போல் தோன்றிற்று தேசானந்தருக்கு. சிறையிலே மூன்ருண்டுகள், பயங்கரமான மௌனத்தில் வாழ்ந்தவரல்லவா? வெளியுலகில் வந்தும் மௌனத்தைக் கடைப்பிடிப்பது அவருக்கு வேதனையாக

இருந்தது. இரவு முழுதும் தூங்காமல் பேசிக்கொண்டிருக்க வேண்டும்போல் தோன்றிற்று. அந்தப் பெண்ணோ வக்கீலின் கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிற சாட்சி மாதிரி, 'டக் டக்' என்று பதில் சொல்லி நிறுத்திவிடுகிருள். எதிர்ப் படுக்கையில் படுத்திருந்தவரோ, வண்டியில் ஏறிப் படுத்ததுமே தூங்கிவிட்டார். ஆகவே, இந்தப் பெண்ணுடனேயே மேலும் பேசுவோம் என்ற எண்ணத்தில்,முன்பு முடித்த இடத்திலிருந்து மேலும் தொடர்ந்தார் தேசானந்தர்.

"உங்கள் பெயர்?"

"உம்"

"உங்கள் பெயரென்ன என்று கேட்கிறேன்"

"மனோன்மணி"

"கல்யாணம் ஆகிவிட்டதா"

...இந்தக் கேள்வியைக் கேட்க அவருக்கே வெட்கமாயிருந்தது. இருந்தாலும் பதட்டத்தில் கேட்டு வைத்துவிட்டார். அந்தப் பெண் ஒரு மாதிரியாக விழித்தபடி, "ஆகிவிட்டது" என்ருள்.

"புருஷனுக்கு என்ன உத்தியோகம் ?"

"படிக்கிருர்!"

"இதுதான் நம்ம ஆட்களிடம் உள்ள ஒரு கெட்ட குணம். படித்துக்கொண்டிருக்கும் போது கல்யாணம் எதற்கு? இல்லே, கல்யாணம் செய்த பிறகு படிப்பு எதற்கு? எதோ கல்யாணம் செய்தோம்; பெண்டாட்டி பிள்ளேயோடே வாழ்ந்தோம்; நாட்டுக்கு உழைத்தோம் என்று போகாமல், இங்கிலீஷ் படிப்பில் சுவர்க்கமே கிடைத்து விடுவதுபோல் நினேத்துக் கொள்கிருர்கள்."

—அந்தப் பெண் சிரித்தாள். உயிரற்ற அந்தச் சிரிப்புக்கூட அவரது பேசும் ஆசையை அதிகம் வளர்த்தது.

"பாருங்கள்! ஜெயிலில் என்னோடு ஒரு கைதி இருந்தான். அவன் நிறைய்ப் படித்தவன் கல்யாணம் ஆனதற்குப் பிறகும் நான்கு ஆண்டுகள் கடனே உடனே வாங்கிப் படித்திருக்கிருன். படித்த பிறகு வேலேகிடைக்கவில்லே.குடும்பத்தில் ரொம்பக் கஷ்டம் வந்துவிட்டது. இரண்டு குழந்தைகள் அவனுக்கு. அந்தக் குழந்தைகளும் மனேவியும் மூன்று நாள் தொடர்ந்து பட்டினி கிடந்ததைக் காணச் சகிக்காமல் அவர்கள் தூங்கும்போது அரிவாளால் வெட்டிக் கொன்றுவிட்டான். தானும் சாகப் போகும்போது போலீசார் பிடித்துவிட்டார்கள். எல்லாம் எதனுல்? இந்த இங்கிலீஷ் படிப்பினுல்தான். இங்கிலீஷ்காரன் ஒழிந்துவிட்டால் நம் நாட்டிற்கு எந்தவிதத் தொல்லேயும் இல்லே."

—தேசானந்தர் படிப்பையே கெடுதல் என்றும் இங்கிலீஷ்காரன் என்ற சாதியே பொல்லாதது என்றும், அதைப்பற்றி அக்கறையே இல்லாத அந்தப் பெண்ணிடம் பிரமாதமாகப் பேச ஆரம்பித்தார். அவள், தான் இதை விரும்பவில்லே என்பதை அடிக்கடி முகபாவத்தில் காட்டிக் கொண்டிருந்தும்கூட, தேசானந்தர் நிறுத்துவதாக இல்லே. தேச விடுதலேப் போருக்கு ரயிலிலேயும் ஒரு உறுப்பினரைச் சேர்த்துவிட வேண்டும் என்று அவர் படாத பாடு பட்டார். அந்தப் பெண்ணோ வேறொரு உலகத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டவளாகக் காணப்பட்டாள். தேசானந்தர் தொடர்ந்தார் :

"உங்களேப் போன்ற பெண்கள் எப்படிக் கணவன் படித்துக்கொண்டிருப்பதைச் சகித்துக்கொள்கிறீர்கள் ? புருஷன் இரவும் பகலும் படித்துக்கொண்டிருந்தால் குடும்ப வாழ்க்கையில் என்ன சந்தோஷத்தைக் காண முடியும்? படிப்பு வந்து என்னத்தைச் சாதித்துவிடப் போகிறது ? காந்திஜிகூட ஓரளவு படித்தால் போதும் என்றுதான் சொல்லுகிருர். இப்போ என்னேப் பாருங்கள் ? நான் என்ன படித்து விட்டேன் ?......"

அவர் ஒன்றும் படிக்காமலே நிறையக் காரியம் சாதித்துவிட்டது அந்தப் பெண்ணுக்குத் தெரியாமலா இருக்கும் என்ற தோரணேயில் பேசினுர். உலகத்தில் நடமாடும் பலவகைப் பிரகிருதிகளில் இதுவும் ஒன்று என்கின்ற அளவுக்கே அவள் இதை ரசித்தாள்.

பிறகு, தேசானந்தர் தன்னேப் பற்றியும் தன் குடும்பத்தைப் பற்றியும் பேசிக்கொண்டே வந்தார். அந்தப் பெண் உம் போடவுமில்லே. அந்தப் பேச்சைக் கேட்கவுமில்லே. ஆனுலும் அவர் நிறுத்தவில்லே. கடைசியாக தேசானந்தர், உங்கள் புருஷனே நான் பார்க்கவேண்டும். அவரிடம் நிறையப் பேசி, தேச சேவைக்குத் திருப்ப ஆசைப்படுகிறேன். அவர் விலாசத்தைச் சொல்லுங்கள்" என்ருர். அந்தப் பெண் திணறிப்போய் வேறு வழியின்றி, தன் புருஷன் பெயர் அருணுசலம் என்றும், சென்னே புரசவாக்கத்தில் அவர் இருப்பதாகவும் விலாசம் எழுதிக்கொடுத்தாள். கொடுத்துவிட்டு மறுபுறம் திரும்பி, தூங்க ஆரம்பித்தாள். அதற்கு மேலும் பேசமுடியாமல் தேசானந்தர் அந்தப் பெண்ணே ஆசனத்தில் படுக்கச் சொல்லிவிட்டு, தான் தன் விரிப்பை விரித்து, தரையில் படுத்துக்கொண்டார். மூன்று மணி சுமாருக்கு தூக்கம் அவரை ஆட்கொண்டது. ஐந்தரை மணிக்கு திருச்சி ஜங்ஷனில் வந்து நின்றது ரயில். 'பிளாட்பாரத்தின் பரபரப்பு தேசானந்தரை விழிக்க வைத்தது. எழுந்து படுக்கையைச் சுருட்டினுர். ஆசனத்தைப் பார்த்தார். அந்தப் பெண்ணேக் காணவில்லே. ஆனுல் அவளது பெட்டி இருந்தது. 'சரி, முகங் கழுவப் போயிருப்பாள் !" என்று தீர்மானித்துக்கொண்டு ஆசனத்தில் அமர்ந்தார் தேசானந்தர். மூன்ருண்டுக் காலம் சிறையிலே கண்விழித்து திடீரென்று ஒரு நாள் ரயிலிலே கண் விழிக்கும் போது மனதிற்குப் பிரமாத மகிழ்ச்சி ஏற்படுவது வழக்கம். தேசானந்தருக்கும் அந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. இரண்டு காப்பி கொண்டுவரச் சொன்னுர். காப்பி கொண்டுவந்து வைக்கப்பட்டது. 'பாத்ரூமிலிருந்து அவள் வரட்டும், பிறகு சாப்பிடுவோம் என்று எண்ணி தேசானந்தர் தானும் சாப்பிடாமல் இருந்தார். வெகு நேரமாகிவிட்டது. அவளேக் காணவில்லே. தேசானந்தர் சந்தேகப்பட்டு பாத்ரூம் கதவைத் தட்டினுர். கதவு தானுகத் திறந்துகொண்டது. ஆனுல் அவள் அங்கே இல்லே.

ரயிலுக்கு முதல் மணி அடித்தது. பெட்டியை மறந்துவிட்டு ஒருவேளே முந்திய ஸ்டேஷனிலேயே இறங்கிவிட்டாளோ என்று சந்தேகப்பட்ட தேசானந்தர், எதிரே இருந்தவரை விசாரித்தார். ஆனுல் அவரோ, எழும்பூரில் படுத்தவர் திருச்சியில் தான் எழுந்தாராம். தேசானந்தருக்கு ஒன்றும் புரியவில்லே. இரண்டாவது மணி அடித்து ரயிலும் புறப்பட்டது. தேசானந்தர் அந்தப் பெட்டியைப் பரிதாபமாகப் பார்த்தார். "சரி, நம்மிடம்தான் அவள் கணவனுடைய விலாசம் இருக்கிறதே! பிறகு கொண்டு போய்ச் சேர்த்துவிடலாம்" என்று எண்ணி, அந்தப் பெட்டியைத் தன் பெட்டியோடு சேர்த்து வைத்துக் கொண்டார். புகைவண்டி காரைக்குடிக்கு வந்து நின்றது. காரைக்குடி நிலேயத்தில் ஏராளமான கூட்டம். தேசானந்தரை வரவேற்கத்தான் அவ்வளவு கூட்டம் வந்திருந்தது. தேசானந்தர் கதவைத் திறந்து வண்டிப்படியில் இருந்தபடியே எல்லோருக்கும் வணக்கம் செலுத்தினுர். ஆனுல் ஆர்வத்தைப் பிரதிபலித்த அவரது கண்கள் அந்தக் கூட்டத்துக்கிடையே தன் குடும்பத்தைத் தேடிக்கொண்டிருந்தன. "தந்தி கிடைத்திருக்குமே! வந்திருப்பார்களே !" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டார். ஆ ! கண்டு பிடித்துவிட்டார். அதோ நிற்கிருர் அவரது மனேவி. குழந்தைகளும் அருகிலேயே நிற்கின்றன. தேசானந்தர் ஓடிப்போய் பெண் குழந்தையைத் தூக்கிக் கொண்டார். கூட்டம் அந்தக் காட்சியைப் பார்த்துக் கண்ணீர் வடித்தது. மூன்ருண்டுகளுக்குப் பிறகல்லவா சந்திக்கிருர் ?

பிறகு, கூட்டம் ஜெயகோஷம் போட்டபடியே கலேந்தது.தேசானந்தரும் குடும்பத்தினரும் ஒரு தனிக் காரில் காரைக்குடி நகருக்குள் அழைத்துவரப்பட்டார்கள். மூன்ருண்டுகளுக்குப் பிறகு காரைக்குடியைப் பார்த்த அவர் கண்களுக்கு காரைக்குடி நகர் பிரமாத அளவிலே விரிவடைந்திருப்பதாகத் தோன்றிற்று.அங்கு நண்பர்களோடு அளவளாவி விட்டு மாலேயில் குடும்பத்தோடு மேலூர் வந்து சேர்ந்தார் தேசானந்தர். வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தபோது அவர் மனம் ஆனந்தக் கடலில் மிதந்தது. மூன்ருண்டுகளுக்குப் பிறகல்லவா வருகிருர் ? வந்ததும் வராததுமாக "சரசு எங்கே" என்று கேட்டார் தேசானந்தர். "அத்தை வீட்டில் இருக்கிருள்; இதோ கூட்டிவரச் சொல்லுகிறேன்" என்று கூறி, "டே கண்மணி ! அன்னி ! நீங்கள் போய் சரசு அத்தையைக் கூட்டி வாருங்கள்" என்று இரண்டு பேரையுமே அனுப்பினுள் கோமளம். கண்மணியும்அன்னியும் அத்தையைக் கூட்டிவர ஓடினுர்கள். தேசானந்தரும் கோமளமும் தனியாக இருந்தார்கள். தேசானந்தர் தன் மனேவியை அணேத்து முத்தங்களே மாலேயாகத் தொடுத்தார். மூன்ருண்டுகளுக்குப் பிறகு பெறும் முத்தமல்லவா அது ? தேசானந்தருக்கு உலகமே மறந்தது. அவர் ஒன்றும் சிற்றின்பத்துக்காகத் துடிப்பவர் அல்ல. என்ருலும் அருகிலிருக்கும் மனேவியும் தனிமையும் ஆசையில் எண்ணெய் வார்க்கவே அவர் இளங்காதலர் ஆனுர். சிரித்துக் கொண்டே, அவர் பிடியில் இருந்த கோமளம், அவர் கொண்டுவந்த பெட்டிகளே நோக்கினுள். "என்ன இரண்டு பெட்டிகள்" என்று கேட்டாள். தேசானந்தர் நடந்ததைச் சொன்னுர். "அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது ?" என்று கேட்டாள் கோமளம். "யாருக்குத் தெரியும் ? பெட்டி பூட்டியிருக்கிறதே" என்ருர் தேசானந்தர். "இல்லே ! பூட்டுத் திறந்திருக்கிறது பாருங்கள் !" என்ருள் கோமளம். "திறந்தே இருக்கட்டுமே ! நாம் ஏன் அதைப் பார்க்கவேண்டும் ? அவள் புருஷனுடைய விலாசம் என்னிடம் இருக்கிறது. மீண்டும் சென்னேக்குப் போகும்போது அவனிடம் கொண்டுபோய் இதைக் கொடுத்துவிடுவோம்" என்ருர் தேசானந்தர். இருந்தாலும் அதில் என்ன இருக்கிறது என்று பார்க்க விரும்பினுள் கோமளம். "ஏதாவது விலே உயர்ந்த சாமான்கள் இருந்தால் அவர்களுக்குக் கடிதம் எழுதிப் போட்டு, வந்து எடுத்துக்கொண்டு போகச் சொல்லலாமல்லவா ?" என்று கூறிவிட்டு, கணவனது பதிலே எதிர்பாராமலே,பெட்டியைத் திறக்கப் போனுள் கோமளம். தேசானந்தரும் அதைத் தடுக்கவில்லே. கோமளம் பெட்டியைத் திறந்தாள். "ஆ !" என்று அலறினுள். "என்ன" என்று அருகிலே ஓடினுர் தேசானந்தர். அந்தப் பெட்டிக்குள் ஒரு குழந்தை கிடந்தது. அதன் அருகிலேயே ஒரு கடிதமும் கிடந்தது.

தொடரும்

அறிவிப்பு

ஆசிரியர் கண்ணதாசன் 23-6-56 இரவு பேசுவதாக இருந்த வானெலி நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அன்றைய தினத்தில் வெளியூரில் நடைபெறவிருக்கும் சில விழாக்களின் நிகழ்ச்சிகளே வானெலியில் ஒலிபரப்பு இருப்பதால், ஆசிரியரின் நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக வானெலி நிலேயத்திலிருந்து அறிவிப்பு வந்துள்ளது.

சரிதைச் சித்திரம்

துக்ளக் எழுச்சி!

★

"சூழ்ச்சித் திட்டங்கள் உருவாகி வருகின்றன. எந்த நேரத்தில் தங்கள் மணிமுடி பறிக்கப்படுமோ, தங்கள் தலை, தரையில் உருளுமோ, தெரியாது !"

"என்ன உளறுகிருய் ?"

"உளறவில்லை அண்ணு! நிலைமை மோசமாகிக்கொண்டு வருகின்றது! மதுவின் சுவையிலும், மயக்கு மொழி பேசி மையலூட்டும் மங்கையரின் அணைப்பிலும் சிக்கிச் சொக்கியிருக்கும் தங்களுக்கு, வெளியுலகத்தைப் பற்றி அறியவும் நினைத்துப் பார்க்கவும் நேரமேது? மாடியின் அடித்தளம் தீப்பிடித்து எரியும்போது, 'மதிமுகத்தாளே! இந்நேரம் நான் சுவைத்தது மதுவையா அல்லது உன் செவ்விதழ்களையா?' என்று, உப்பரிகையில் இருந்து சிருங்கார ரசம் ததும்பக் காரிகையுடன் காதல்மொழி பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அண்ணு !"

"புரியும்படியாகச் சொல் !"

"துரோகக் கூட்டம் தங்களுக்கு எதிராக வேலை செய்கிறது. இனியாவது விழிப்புக்கொள்ளுங்கள் !"

"துரோகக் கூட்டம் – சூழ்ச்சித் திட்டம்......என்ருல் இதை நம்ப முடியவில்லையே! நீ கண்களைத்தான் இழந்துவிட்டாய் என்று நினைத்தேன் தம்பி ! அறிவையுமல்லவா துறந்துவிட்டிருக்கிருய்!"– தன் அருகில் அமர்ந்திருந்த தம்பியைப் பார்த்து முபாரக்ஷா ஏளனமாகச் சிரித்தான்.

"அண்ணு! உடன் பிறந்த பாசம் என்னை இங்கு இழுத்து வந்தது ! ஒரு காலத்தில் உம்மைப்போலவே உல்லாச வாழ்வை அனுபவிக்க உதவிய என் அழகிய இரு கண்களை, மாலிக்காபூரின் பதவிப் பித்து பறித்துக்கொண்டது ! அதற்காக ஏளனமாகப் பேசாதீர்கள் அண்ணு !" என்று தேம்பித் தேம்பி அழுதான் முபாரக்ஷாவின் தம்பி. பார்வையிழந்த அவன் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது !

"எதற்காக அழுகிருய்? உனக்கு என்ன குறை வந்துவிட்டது இப்போது ?" என்ருன், சலிப்பான குரலில், முபாரக் ஷா.

"என் குறை போக்கிக்கொள்ள நான் இங்கு வரவில்லை அண்ணு! கண்ணிழந்த போதே நான் எல்லாவற்றையும் இழந்துவிட்டேன்...... தோழமை உருவில் உம்மருகில் அழகாகப் படமெடுத் தாடிக்கொண்டிருக்கும் துரோகம் உமது தலையையே சாய்க்கச் சமயம் பார்த்துக் கொண்டிருப்பதை அறிந்துதான் அண்ணு, வேதனைப்படுகிறேன் !"

"மாலிக் குஷ்ருகானைக் குறை கூறியவர்களில் யாரையும் இதுவரை நான் மன்னித்தது கிடையாது. உடன்பிறந்த சகோதரன் என்ற காரணத்தைக் கொண்டு உன்னை மன்னிக்கிறேன். இனிமேல் இப்படியெல்லாம், என்ருல் நம்ப முடியாத புரட்டுகளைச் சொல்லி என் சிந்தையைக் குழப்ப முயல வேண்டாம். சரி, நீ போகலாம்!"

"எதற்கும் எச்சரிக்கையாக இருங்கள்; நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு, எழுந்து சென்ருன் மன்னனின் தம்பி.

"பாதுஷா! கண்ணிழந்த பின்பும் தங்கள் தம்பிக்கு எவ்வளவு குரோத புத்தி பாருங்கள் !"

"அவனைக் கோபிக்க வேண்டாம் கண்ணே! அவன் அனுதாபத்திற்குரியவன்! எங்கே, அந்த மதுக் கோப்பையை அங்கு வைத்துவிட்டு அருகில் வா! நேரத்தைப் பாழாக்காதே, என் நெஞ்சம் கவர்ந்தவாவாய் !"

"பாதுஷா !"

"அன்பே !"

"பழரசம் இன்னொரு கோப்பை..."

"வேண்டாம், எனக்குப் பழரசம் வேண்டாம். இதழமுதம் வேண்டும் இப்போது! அருகில் வா! அப்படியே அணைத்துக் கொள் என்னை ! வண்ணக் கலாபமயிலே ! வா ! சீக்கிரம் வா !"

யாரோ மாடிப்படி யேறிவரும் காலடியோசை கேட்டு, மங்கையின் அணைப்பிலிருந்து முபாரக் ஷா விடுபட்டான்.

"உள்ளே வரலாமா பாதுஷா ?"

"வா மாலிக்! ஏதாவது செய்தியுண்டா ?"

"வருத்தத்திற்குரிய செய்தி அரசே ! தங்கள் தம்பி..."

"பொருமையின் காரணமாக அவன் உன்னைப் பற்றி ஏதோ குறை சொல்லிவிட்டுப் போனுன். அதற்காக நீ வருந்த வேண்டாம்."

"அரசே! அதற்காக நான்வருந்தவில்லை. அல்லா அவரைத் தண்டித்துவிட்டார்! அதை நினைத்தே விசனிக்கிறேன் !"

"மாடிப்படிகளில் உருண்டு விழுந்து தங்கள் சகோதரர் இறந்துவிட்டார் அரசே !"

முபாரக் ஷா எழுந்து சென்று பார்த்தான் ! இரத்தக்கறை படிந்த உடலுடன் அவனது தம்பி பிணமாகக் கிடந்தான் !

"மாலிக் ! நாம் வருத்தப்பட்டுப் பயனில்லை. நல்லாரைப் பழிப்பவர்கள், நீதியின் தண்டனையிலிருந்து தப்பமுடியாது !" என்று சொல்லிவிட்டு, அங்கே நின்றிருந்தவர்களிடம் சவத்தை அடக்கம் செய்யுமாறு கட்டளையிட்டான். பின்பு இருவரும் மாடிக்குச் சென்ருர்கள்; வளைக்கரத்தாள் தந்த மதுவை அருந்திஞர்கள் !

"மாலிக்! வந்த காரியம் என்னவென்று கேட்க மறந்து விட்டேனே !" என்ருன் மன்னன்.

"எழிலரசிகள் இருவர் இன்று கொண்டு வரப்பட்டிருக்கிருர்கள் பாதுஷா !"

"எழிலரசிகளா ?"

"அவர்கள் அழகை மதிப்பிட்டுக் கூற, அதைவிட உயர்ந்த வார்த்தை ஏதாவது இருந்தால் சொல்லுங்கள் அரசே !"

"அருகிலிருக்கும் அஞ்சுகத்தை விடவா அவர்கள் அழகானவர்கள்? முட்டாள்! நிலவைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு தூரத்திலிருக்கும் தாரகைகளைப் புகழ்கிருயோ!" என்று கூறிக் கண் சிமிட்டினுன் அரசன். "இவளை அருகில் வைத்துக்கொண்டு, மற்றவரைப் புகழ்ந்து கூறுகிருயே! இவள் மனம் வருந்தும்படி பேசினுல், இப்போதைய இன்பநேரம் பயனற்றதாகிவிடும்!" என்னும் கருத்தைத்தான், மன்னன் கூறுகிருன் என்ற கருத்தைப் புரிந்துகொண்ட மாலிக் குஷ்ருகான், "மன்னிக்க வேண்டும் அரசே! மாலை வருகிறேன் !" என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்ருன். பகைவரிலொருவனை மாடியிலிருந்து கீழே உருட்டிக்கொன்ற பெருமிதம், அவன் முகத்தில் நிழலாடியது !

கண்ணிழந்த தனது தம்பி, மாடிப்படிகளில் இறங்கிச் செல்லும்போது காலிடறி விழுந்து உருண்டானு, அல்லது மாலிக் குஷ்ருகானுல் உருட்டப்பட்டானு என்ற சிந்தனை ஏதுமின்றி, மன்னன் முபாரக்ஷா சிற்றிடையாளை நோக்கிச் சிட்டுப்போலப் பறந்தான். கலகலவென்ற சிரிப்பொலி அந்த அறை முழுவதும் எதிரொலித்தது !

2

கையினுல் தூக்கிப் பார்த்தே, ஒரு உலோகம் தங்கமுலாம் பூசப்பட்ட பித்தளையா அன்றிப் பசும்பொன்னு என்று கூறிவிடலாம். ஊர்ந்து செல்வது வழலைப்பாம்பா அல்லது கொடிய நஞ்சுடைய கட்டுவிரியனு என்று சற்று கூர்ந்து கவனித்தால் சொல்லிவிடலாம். தூரத்தில் ஓடும் அருவியில் நீரருந்திக்கொண்டிருப்பது பாயும் வேங்கையா அல்லது பார்த்ததும் பயந்தோடும் புள்ளிமானு எனறு சற்று நிதானித்துப் பார்த்தால் நிச்சயித்துவிடலாம். ஆனுல், ஒருவனின் உள்ளத்தை மதிப்பிடுவது அவ்வளவு எளிதான காரியமா ?

சந்தர்ப்ப வசத்தால் – சூழ்நிலையின் அமைப்பால்–மன ஒருமைப்பாட்டால் ஒருவருடனொருவர் நட்புக்கொள்வது இயற்கை - இது களங்கமில்லாத தன்னலமற்ற தோழமை.

கிடைத்த சந்தர்ப்பத்தைக் கைவிடாமல், ஒருவரிடம் தோழமை கொள்வது தன்னலத்தின் விளைவு. அப்படித் தோழமை கொள்வோர் நடுத்தர வர்க்கத்தினர். கூம்பிய மனம் கொண்டவர்களாகவே இவர்கள் இருப்பார்கள்.

சூழ்நிலையைத் தாமே வலிய ஏற்படுத்திக்கொண்டு, வலியத் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு, உயிர் கொடுக்கத் தயங்காத உண்மை நண்பராய் நடிப்பவர் வெறும் சுயநலக்காரர் மட்டுமல்ல; நம்பியவரின் உயிருக்கே உலைவைக்கவும் தயங்கமாட்டார்கள்.

மூன்ருவது ரகத்தைச் சேர்ந்தவன் மாலிக் குஷ்ருகான் !

படை நடத்திச் சென்று பகைவரை முதுகிட்டோடச் செய்யக் கற்றிருந்த முபாரக் ஷா, நட்பின் இலக்கணத்தை அறிய மறந்துவிட்டான். அழகாக நெளிந்தாடும் நல்ல பாம்பு, எந்த நேரத்திலும் தன்னைக் கடிக்கக்கூடும் என்று அறிந்து எச்சரிக்கையாய் அதனிடம் பழகும் பிடாரனே சில சமயங்களில் அதன் நச்சுப்பற்களுக்கு இரையாகிருன். பாம்பின் தன்மையறியாமல் அதனுடன் பழகுபவன் நிலை பரிதாபத்திற்குரியதல்லவா ! அந்த நிலையில்தான் முபாரக் ஷா இருந்தான் !

கி. பி. 1316-ம் ஆண்டில் முபாரக் ஷா பட்டத்திற்கு வந்தபோது, ஆட்சிப்பொறுப்பில் மிகுந்த சிரத்தையுடையவனுக இருந்தான், முகம்மதிய ஆதிக்கத்தை நான்கு திக்குகளிலும் பரப்பி, மொகலாய

மிக விரைவில்

★ முல்லை ★

ஆசிரியர்: கண்ணதாசன்

இலக்கியத் திங்களிதழ்

★ இல்லந்தோறும் தென்னவர் உள்ளந்தோறும் இன்பத் தமிழ் வளர்த்து இலட்சிய கீதமெழுப்பும் கன்னித் தமிழ்க் கருவூலம்.

★ தமிழகத்தின் அறிஞர்கள், நாவலர், பாவலர், நல்லிசைப் புலவர்கள் அனைவரும் எழுதுவர்.

விலை அணு 8

.... விபரங்கட்கு : ....

நிர்வாகி, "முல்லை"

2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.

சாம்ராஜ்யத்தை மேலும் பெரிய தாக்கக் குன்றாத ஊக்கமும் குறையாத உற்சாகமுமுள்ளவனுக இருந்தான்.

கி. பி. 1318-ம் ஆண்டு, தக்காணத்தின்மீது படையெடுத்துச் சென்று,தேவகிரிக் அரசனை ஹரிப்பால் என்பவனைத் தோற்கடித்தான். அவன் தக்காணப் படையெடுப்பால், விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள அநேக நாடுகள் குழப்பத்திற்குள்ளாயின. இப்படையெடுப்பு முடிந்து அவன் டில்லிக்குத் திரும்பிய பிறகுதான், அவன் வாழ்விலோர் திருப்பமேற்பட்டது.

வெற்றி பெற்று திரும்பிய மன்னனை, "முபாரக் ஷா வாழ்க! வாழ்க!" என்ற வாழ்த்தொலியுடன் டில்லி நகரம் வரவேற்றது. குடிமக்கள் கொற்றவன்பால் கொண்டிருக்கும் பேரன்பை எண்ணிப் பூரித்தான் மன்னன். வெற்றி பெற்றுன் மன்னன் என்பதில் மகிழ்ச்சியடைந்த மக்கள், தனக்குச் சரியான அரச மரியாதையுடன் வீரனெருவன் வர அரசன் அனுமதித்திருப்பதைக் கண்டு பெரிதும் வியப்பும் திகைப்பும் கொண்டார்கள்! அந்த வீரன் வேறு யார்? மாலிக் குஷ்ருகான்தான்!

மறுநாள் அரசவை கூடியது. தக்காணப் படையெடுப்பில் தனக்குக் கிடைத்த வெற்றியைப் பற்றிப் பெருமிதத்துடன் முபாரக்ஷா விளக்கிக் கூறினுன். போரிலே வீர மரணமடைந்த தன் படைவீரர்களுக்கு வணக்கம் கூறினுன். அவையில் வீற்றிருந்த வீரருக்கு நன்றி தெரிவித்தான்; விருதுகள் வழங்கினுன். கடைசியாக மாலிக் குஷ்ருகானை அனைவர்க்கும் அறிமுகம் செய்துவைத்தான்:

"அவையோரே! இன்று உங்கள் முன்பு மன்னனுக நான் மீண்டும் அமர்ந்திருக்க முடிந்திராது-இதோ அமர்ந்திருக்கும் மாலிக் குஷ்ருகான் அன்று அமர்க்களத்தில் தக்க சமயத்தில் என்னைக் காப்பாற்றுமல் இருந்திருந்தால்! மடை திறந்தாற்போல் நமது படைவீரர்கள், எதிரிகள்மீது பாய்ந்து தாக்கிக்கொண்டிருந்த நேரத்தில், நமது படையிலிருந்த சில கருங்காலிகள், பின்புறமிருந்து நம்மைத் தாக்கினர். அந்தக் குண்டர்களில் ஒருவன் என்னையும் தாக்க அனுகிய நேரத்தில் அல்லாவின் அவதாரம்போல் என்னை விபத்திலிருந்து காப்பாற்றினுர், அருமைத் தோழர் மாலிகுஷ்ருகான்! அவருக்கு உங்கள் சார்பாகத் தலைதாழ்த்தி நன்றி தெரிவிக்கிறேன்!"

"மாலிக் குஷ்ருகான் வாழ்க!" என்ற வாழ்த்தொலி, அரசவையில் கிளம்பி எதிரொலித்தது! அரசன் கையமர்த்தி மேலும் கூறினுன்:

"என் உயிர்காத்த உண்மை நண்பர் மாலிக் குஷ்ரு, வெறும் வாய் நன்றிக்கு உரியவரல்லர். தளபதியாகவும் பிரதானியாகவும் இருக்கும் தகுதி அவரிடத்திலிருக்கிறது! இப்போதிருக்கும் அரசியல் சூழ்நிலையை யொட்டி அவரை என் அந்தரங்க நண்பராக, மெய்க்காப்பாளராக இன்றுமுதல் நியமிக்கிறேன்; இல்லை, இல்லை - இருக்குமாறு அவரைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!"

பலத்த கைதட்டலுக்கிடையில் மாலிக்குஷ்ருகான் தனது நன்றியையும் வணக்கத்தையும் சபைக்குத் தெரிவித்துக்கொண்டான்.

அன்றுமுதல் அரசனின் வாழ்க்கை; குஷ்ருகானின் வுகைக்குள்ளடங்கிய சிறு பேழையாயிற்று! ஐந்தாம் படை வீரராகப் போர்க்களத்தில் பணியாற்றிய குஷ்ருகானின் ஏற்றத்திற்குதவிய வீரர்கள், சில நாட்களில் அவனுல் சிரச்சேதமடைந்தனர்! "செய்ந்நன்றிக்கு இதுவா பலன்?" என்ற அவர்கள் அவலக் குரலை, அலட்சியத்துடன் குஷ்ருகான் கேட்டபடி கேலிச்சிரிப்புச் சிரித்தான். உருவத்தில் மனிதனுக, உள்ளத்தில் மிருகமாக-செயல்புரிந்தான் குஷ்ருகான்!

ஒருநாள் அரசன் மிகவும் சோர்வுற்றிருந்த நேரத்தில், மதுதரும் சுவையையும் மங்கையர் தரும் இன்பத்தையும் அனுபவித்து உணர வழி செய்தான் குஷ்ருகான்!

3

சிற்றின்பக் கேணியிலேயே எந்த நேரமும் மூழ்கித் திளைத்துக்கொண்டிருந்தான் மன்னன் முபாரக்ஷா! வெளியுலகம் எப்படியிருக்கிறது என்பதை அவன் கண்டு வெகு நாட்களாகிவிட்டன!

நல்லாரிடத்திலில்லாத இழி குணங்கள் அத்தனையும் ஒருருவம் பெற்றுற்போலப் பிறப்பெடுத்த மாலிக் குஷ்ருகானிடம் அரசியற் பொறுப்பையும், ஆரணங்குகளைத் தேடி அவர்களை அந்தப்புரத்திற்குக் கொண்டுவரும் பொறுப்பையும் ஒப்படைத்துவிட்டான்!

மன்னனின்மீது அன்பும் நாட்டின்மீது பற்றும் கொண்ட வெள்ளை மனத்தினர் சிலர், மாலிக் குஷ்ருகானின் அந்தரங்கமறிந்து அரசனிடம் முறையிட்டனர். ஆனல், அந்தோ! அப்படி முறையிட்டவர்களின் சொல்லைக் கேளாததுடன், அவர்களை மன்னிக்கும் பொறுப்பையும் தண்டிக்கும் பொறுப்பையும் கூட, குஷ்ருகானிடமே விட்டுவிட்டான் முபாரக் ஷா!

மன்னனின் உடன்பிறந்த தம்பியையே மாடிப்படிகளில் உருட்டிக் கொன்றுன் என்றுல், தனக்கு எதிராக வேலை செய்தோரைக் குஷ்ருகான் எவ்விதமாகத் தண்டித்தான் என்பதை விளக்கத் தேவையில்லை!

குஷ்ருகானை வெறுத்ததைப் போலவே குடிமக்கள், மன்னன் முபாரக் ஷாவையும் வெறுத்தார்கள். நாடு நலனுற, குரூரனை குஷ்ருகானும், அவனது கைப்பாவையான முபாரக் ஷாவும் தொலைவதே மேல் என்ற நினைப்பில் ஆறுதல் அடைந்தார்கள்.

குஷ்ருகானின் எண்ணம் நிறைவேறும் அந்த நாளும் வந்தது! கி. பி. 1320 ஏப்ரல் மாதத்தில் ஓர்நாள்-இரவு நேரம்! அரண்மனையின் அந்தப்புரம்! மதுவருந்திய மயக்கத்தில், ஆடலழகி யொருத்தியின் அதரத்தைச் சுவைத்த வண்ணம், மலர் பரப்பிய மஞ்சத்தில் படுத்திருந்தான் முபாரக் ஷா! வெளியில் கதவு தட்டப்படும்சப்தம் கேட்டது! மன்னன் அணைப்பிலிருந்து விலகி எழுந்து சென்று மங்கை கதவைத் திறந்தாள். மாலிக் குஷ்ருகான் அறையினுள் நுழைந்தான்-எந்த நேரத்திலும் அரசனிடம் நெருங்கி உரையாடும் உரிமை அவன் ஒருவனுக்குத்தான் உண்டு!

"வா மாலிக்! இந்த நேரத்தில் இங்கு நீ வருவாயென்று நான் எதிர்பார்க்கவில்லை!" – கனிவான குரலில் மன்னன் பேசினுன்.

"மன்னிக்கவேண்டும் அரசே! தாங்கள் எதிர்பார்க்காத செயல்கள், நாட்டில் எவ்வளவோ நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன!"

"என்ன சொல்கிருய் மாலிக்? இப்படி உட்கார்ந்து நிதானமாகப் பேசு!"

"உட்கார்ந்து பேச நேரமில்லை முபாரக் ஷா அவர்களே! இவ்வுலகை விட்டுப் பிரியும் நேரம் உமக்கு மிக மிக அருகிலிருக்கிறது! கடைசி முறையாக அல்லாவை நினைத்துக்கொள்ளுங்கள்!" மிடுக்குடன் மன்னனின் எதிரில் மாலிக்குஷ்ருகான், கரத்தைப் பின்புறம் கட்டியவாறு நின்றுன்! மிரள மிரள விழித்தபடி அழகி, மன்னனின் அருகில் நின்றிருந்தாள்! முபாரக் ஷா எழுந்து உட்கார முயன்றுன்.

"சிரமம் வேண்டாம் பாதுஷா! படுத்திருங்கள்! எப்போதும் இதே இன்பத்தில் இருங்கள்!" என்று கூறிய வண்ணம், பின்புறம் மறைத்து வைத்திருந்த கத்தியை அரசனின் மார்புக்கு நேராக ஓங்கிப் பாய்ச்சினுன்! "ஆ!" என்று அலறிப் புரண்டு கட்டிலிலிருந்து கீழே சாய்ந்தான் முபாரக்ஷா! "அய்யோ!" என்று கூக்குரலிட்ட அந்தக் கோதையும், மாலிக் குஷ்ருகானின் கத்திக்கு இரையானுள்! "துரோகி!" என்று மன்னனின் வாய், ஒருமுறை முணுமுணுத்து ஓய்ந்தது!

இரண்டு பிணங்கள் அந்த ஏகாந்த அறையில் இரத்தவெள்ளத்தில் மிதந்து கிடந்தன!

4

மன்னன் முபாரக் ஷா, மாலிக் குஷ்ருகானுல் கொல்லப்பட்ட செய்தி, காட்டுத்தீ போல் விரைவில் நாடெங்கும் பரவியது!

நஸிருத்தின் என்ற புதுப்பெயருடன் மாலிக் குஷ்ருகான் சிங்காதனமேறினுன். நம்பிய மன்னனைக் கொலைசெய்து நாட்டாட்சியைக் கைப்பற்றிய துரோகியை மக்கள் வாய் ஓய இழிந்துரைத்தார்கள். நாட்டு நலங்காத்து நல்லாட்சி நடத்தும் செங்கோலர்க்கே உரிய சிங்காசனத்தில், சிறுநரியொன்று அமர்ந்திருப்பதைக் காணச் சகியாத பிரமுகர்களும் பொதுமக்களும் நாட்டில் கலவரத்தை உண்டாக்கினுர்கள்!

தான்தோன்றியான மாலிக்குஷ்ருகானின் அடக்குமுறை, மக்களுள்ளத்தில் பொங்கியெழுந்த சினத்தியை மேலோங்கச் செய்தது! "மக்கள் துரோகி மாலிக் குஷ்ருகான் ஒழிக!" என்ற ஒலி எப்பக்கமிருந்தும் கேட்டது! நாட்டில் கலவரத்தை அடக்க அவன் கையாண்ட முறைகள் எதுவும் பயன்தேடித் தரவில்லை! நாட்டிலுள்ள எல்லாக் கட்சிக்காரர்களும், எல்லா மதத்தினரும் மாலிக் குஷ்ருகானை ஒழிப்பதில் ஒருமனப்பட்டார்கள்!

குஷ்ருகான் அரசனுகி ஐந்து மாதங்கள் சென்றன! அணையாத செந்தீயாகப் புரட்சி மேலும்மேலும் கொழுந்துவிட்டெழும்பியது! அரசாங்கப் படையும் அரண்மனைப் பணியாட்களும் தவிர, நாட்டில் மற்றெல்லோரும் மாலிக் குஷ்ருகானின் எதிரிகள்!

பல தலைவர்கள் அடங்கிய சேனையொன்று, காஸிபெக் துக்ளக் என்பவனின் தலைமையில் டில்லியை எதிர்த்தது! மக்கள் தங்கள் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் காஸிபெக் துக்ளக்கிற்குத் தந்தார்கள்!

போர் மூண்டது! மாலிக் குஷ்ருகானின் படை, போருக்காற்றுமல் சின்னு பின்னமாகச் சிதறியோடியது! நாயை அடிப்பதைப் போல மாலிக் குஷ்ருகானைக் காஸிபெக் துக்ளக்கின் வீரர்கள் அடித்துக் கொன்றுர்கள்! அரச மரியாதை ஏதுமின்றி, பிணக்கூட்டத்தோடு பிணமாகப் போர்க்களத்தில் குஷ்ருகானின் பிரேதம் கிடந்தது!

அவன் சவத்தைக் கண்டமக்கள், "தொலைந்தான் துரோகி!" என்று காறியுமிழ்ந்து திரும்பினர்.

கோட்டை வாசல் திறந்தது. 'குபுகுபு'வென்று மக்கள் அரண்மனை புகுந்தனர். துக்ளக்கைச் சிங்காதனத்திலமர்த்தினர்.

—முல்லைவழுதி.

கேள்வியும் பதிலும்

—காரை. முத்துப்புலவர்—

கேள்வி :

ஓடுகின்ற மானிடனே!
ஓடுதற்குக் காரணமென்?

பதில் :

உளறுகிருர் முதலமைச்சர்
ஓடாமல் என்னசெய்ய?

கேள்வி :

ஆடுகின்ற நிதியமைச்ச!
ஆடுதற்குக் காரணமென்?

பதில் :

ஆட்டுகின்றுர் ராஜாஜி
ஆடாமல் என்னசெய்ய?

கேள்வி :

பொதுவுடைமைத்
தோழர்களே-தாளம்
போடுதற்குக் காரணமென்?

பதில் :

புல்கானின் சொல்லிவிட்டார்
போடாமல் என்னசெய்ய?

கேள்வி :

நாட்டுக்கு நாங்களென
நம்மிடத்தில் இவர்களெல்
லாம்
'ஓட்டுக்'கு வந்துவிட்டால்
உண்மையில் நாம்
என்ன செய்வோம்?

பதில் :

ஆழ்வார் திருநாமம்
அழகு குறையாமல்
வாழைமரம் மூன்று
வரிசைக்கு நட்டதுபோல்
நெற்றியிலே போட்டு
நீண்ட திருவோடு
கையில் கொடுத்துக்
காணும் தெருவோடு
ஓட விரட்டிடுவோம்
உன்மத்தர் தங்களுக்கோர்
பாடம் கொடுத்திடுவோம்
பார்.

சென்ற இதழில் '**தில்லிக் கோல் கண்டாடும்**' என்று தொடங்கும் வெண்பாவை எழுதியவர் இசைமணி குருபாதம், திருக்கழுக்குன்றம் என்றிருப்பது தவறு. அதை எழுதியவர், இ. எஸ். மணிநாதன், திருப்பரங்குன்றம் என்று வாசித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

உலகம் பலவிதம்

ஊரில் யாரேனும் ஒருவன் குற்றம் செய்தால் அந்த ஊர் மக்களையே தண்டனைக்கு உள்ளாக்கும் கூட்டு அபராதம் பழங் காலத்தில் இருந்ததாகக் கேள்விப்பட்டதுண்டு. கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு கூடஇந்தப் பழக்கம் சில பல சிற்றூர்களில் இருந்து வந்திருக்கிறது. இருபதாம் நூற்றாண்டு தோடங்கிய பின் அத்தகைய வழக்கம் ஏறக்குறைய அருகிவிட்டது. அப்படிச் செய்வது அநாகரீகம் என்ற எண்ணம்தான் இதற்குக் காரணம். ஆனால் நமது மாநிலத்து சோதா சர்க்கார் மேற்படி கூட்டு அபராதத் திட்டம் ஒன்றைக் கோண்டு வந்துள்ளது.

ஒரு கிராமத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டால், அக் கிராமத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் தண்ட வரி விதிக்கப்படும் என்றும், அந்தக் கிராமங்களில் தண்ட போலீஸ் நிறுத்தி வைக்கப்படும் என்றும் சென்னை மாநில சர்க்கார் திட்டம் தீட்டியுள்ளனர். மதுவை ஒழித்து விட்டோம் என்று பேசிக் கோண்டு, கள்ளச் சாராயததைத் தடைசெய்ய முடியாத நிலையில் இருக்கும் இந்த சர்க்கார், திட்டம் வேறு தீட்டுகிறது. வேடிக்கையாக இருக்கிறது சர்க்காரின் போக்கு.

எவனோ ஒருவன் அதுவும் அவன் மாஜி காங்கிரஸ்காரனாகக் கூட இருக்கலாம், அவன் கள்ளச் சாராயம் காய்ச்சினால், அதைக் கண்டு பிடித்துவிடுகிற சர்க்கார், அந்தத் தனி மனிதன் செய்த குற்றத்துக்காக "அந்த ஊர் மக்களுக்கு 'தண்ட வரி' விதிக்கிறோம்" என்று சோல்வது விளையாட்டுத்தனமாக இருக்கிறது. இதன் காரணமாக அந்தக் கிராமங்களில் நிரந்தரமாக போலீஸ் படையை வைக்கத் திட்டமிட்டுள்ளார்கள். இந்தப் போலீஸ் படைக்கு ஆகும் செலவைக் கிராம மக்கள் எல்லோரும் சேர்ந்து கோடுக்க வேண்டுமாம். போலீசுக்குச் சம்பளம் தர சர்க்காரிடம் பணம் இல்லை போலும்! அதற்காக இந்த 'அருஞ் செயலைச்' சாதிக்க முற்பட்டிருக்கின்றனர். அந்த நாட்களிலே ஆங்கில ஏகாதிபத்தியம், ஒவ்வொரு படையைத் தள்ளி, அதனைப் பராமரிக்க வேண்டிய பெரும் போறுப்பை, சிற்றரசர்களிடம் விட்டதுபோன்று, இந்த மாநில சர்க்காரும் தீர்மானித்திருக்கிறது. நல்ல சர்க்கார்! கோள்ளையடிப்பதற்குத் தக்க வழிதான் கண்டுபிடித்திருக்கிறது. மக்கள் இந்த மகானுபாவர்களை இனியும் நம்பிக்கோண்டிருக்க மாட்டார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

★

உலகத்திலே சிலர் இன்னும் கருத்துக் குருடர்களாகவே இருந்து வருகின்றனர். கிரேதாயுகம், துவாபர யுகம் முதலிய பஞ்சாங்க யுகங்கள் கடந்தும் கூட இன்னும் கிரேதா யுகத்திலேயே தாங்கள் வாழ்ந்து கோண்டிருப்பதாகக் கனவு காண்கிறார்கள் அவர்கள். இந்த நாட்டு அரசியலாரும் சரி, அரசியலில்முக்கியப் போறுப்புள்ளவர்களும்சரி, இன்னும் பழம் பாடாவதிக் கோள்கைகளை விடாது பிடித்து வருகின்றனர். மதச் சார்பற்ற அரசியல் (Secular State) என்று சொல்லிக்கோண்டு 'தபால் தலைகளில்' மும்மூர்த்தியையும், விஷ்ணுவையும் அச்சிட்டு மத ஆதரவு தேடி வருகிறது சர்க்கார். சர்க்காரைப் போலவே, சர்க்காரில் அங்கம் கோண்ட மனிதர்களும் மதத்துக்கு ஆதரவு தேடுகிறார்கள்.

இந்திய சர்க்காரின் மக்கள்சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் ஒரு உயர்நிலைப் பள்ளியில் பேசிய பேச்சு மேற்கண்ட முடிவைத் தான் நமக்குத் தெரிவிக்கிறது.

"பள்ளிகளில் மத போதனை செய்வது அவசியம். இக்காலத்திய மக்கள் தங்களுடைய மதங்களைப்பற்றி எதுவும் தெரியாதவர்களாய் இருக்கின்றனர். ஒவ்வோரு பள்ளியிலும் மத போதனைக்காக ஒரு மணிநேரம் ஒதுக்கப்பட வேண்டும்"—மக்கள் சபைத் தலைவரின் கூற்று இது.

நாடும் நகரமும் எந்த அளவில் இருக்கிறது, உலக நாடுகள் எந்த அளவு மதத்தைப் பற்றித் திட்டமிடுகின்றன என்பது கூட மக்கள் சபைத் தலைவருக்குப் புரியாமல் போனது அதிசயம்தான். ரஷ்யா முதலிய நாடுகளைப் பற்றிக் கேள்விப்பட்டும்கூட பாவம். மக்கள் சபைத் தலைவரின் மன நிலை மாறவில்லையே! 'மதபோதனை அவசியம்' என்று சொல்லி மக்களைப் பிற்பட்ட காலத்துக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறார் அவர். இந்து மதத்தின் காவலர் தான்தான் என்று அவர் நினைக்கிறார் போலிருக்கிறது. "இக்காலத்திய மக்கள் தங்களுடைய மதங்களைப் பற்றி எதுவும் தெரியாதவர்களாக இருக்கின்றனர்' என்று சோல்வதன் மூலம் தமக்கு எல்லா மதங்களின் மேலும் பற்று இருப்பதாகக் காட்டிக் கோள்கிறார். குறிப்பாக, இந்து மதத்தைப்பற்றிய போதனையைப் பள்ளிகளில் கூற வேண்டும் என்பதற்காகவே 'மதங்களை' என்று பன்மையில் குறிப்பிட்டுள்ளார் அவர். மேலும், மதங்களைப் பற்றி மக்கள் தெரியாதவர்களாக இருக்கிறார்கள் என்று அவர் கூறுவதை எண்ணும்போது, தெரியாதிருப்பது நல்லதுதானே என்று கேட்கத் தோன்றுகிறது நமக்கு. பண்புக்கும் அன்புக்கும் இடையூறு செய்யும் மதங்களைப் பற்றித் தெரிந்து கோள்ளாதிருப்பது நல்லதுதானே?

மத போதனைக்காக ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட வேண்டுமாம்! எதற்கு? ஒவ்வோரு மதத்தாரும் சண்டை பிடித்துக் கோள்வதற்கா?

அராஜகத்தை நாட்டில் வளர்க்க வேண்டுமென்றும், மத சம்பந்தமான சச்சரவுகள் ஏற்பட வேண்டுமென்றும், மேற்சொன்ன 'அருங்கருத்துக்'களை அள்ளித் தெளித்திருக்கிறார் அந்த அசகாயசூரர். பள்ளிகளிலே சொல்ல வேண்டிய செய்திகள் பலப்பல இருக்க, எதையோ சோல்லித் திருப்திப்பட்டுக் கோண்டிருக்கும் அவர் போக்கைக் கண்டு வருந்துகிறோம்.

★

பத்துப் பசு வைத்திருப்பவன் ஒரு பசு வைத்திருப்பவனைக் கேட்டானாம். அதுபோலத்தான்இருக்கிறது, பூமிதான இயக்கத்தில் பங்கு கோண்டுள்ள அன்பர்களின் செயல்.

ஜமீன்தார்கள், மிராசுதார்கள் முதலிய போருளாதார வசதியுடையோர்களிடம் பணம் - நிலம் முதலியவை தானமாகக் கேட்டு நிறையச் சேர்த்து வரும் பூமிதான இயக்கத்தார், பாவம், ஏழை ஆசிரியர்களிடம் கூடக் கேட்டிருக்கின்றனர். உண்மையிலேயே நிலைமை அறியாதவர்களாக இருக்கிறார்கள் அவர்கள்.

தமிழகத்தில் ஆசிரியர்கள் படும் அவதிக்கு அளவே கிடையாது. அவர்களது சம்பளமோ சோல்ல வேண்டியதில்லை! குடும்ப வாழ்க்கையோ ரசமானது! இந்த நிலையிலே அவர்களிடம் எந்தத் தானமும் கேட்கக் கூடாது. வேண்டுமானால் நிதானத்தை அவர்களிடம் கேட்கலாம்.

விழுப்புரம் வட்டத்திலே பூமிதான - பண தானப் பிரச்சாரம் செய்யச் சென்றிருந்த பூமிதான இயக்க அன்பர் ஒருவர் "ஆசிரியர் அவர்களுடைய சம்பளத்தில் ஆறில் ஒரு பங்கைப் பண தானமாகக் கோடுக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார். அப்போது அங்கிருந்த ஆசிரியர் ஒருவர் அதை மறுத்திருக்கிறார். "ஏழைகள் நாங்கள்; எங்களிடம் என்ன இருக்கிறது கோடுப்பதற்கு" நாங்கள் அரசாங்கத்திடம் பணத்தை எதிர்பார்க்கிறோம்; நீங்கள் எங்களிடம் எதிர் பார்க்கிறீர்கள்" என்று கேட்டிருக்கிறார்.

அதற்குப் பின்பு பூமிதான இயக்க அன்பர் சுதியை மாற்றிக்கோண்டு பேசியிருக்கிறார். "இஷ்டமிருந்தால் கோடுங்கள்; உங்களை யாரும் கட்டாயப்படுத்தவில்லை" என்று பதில் சோல்லியிருக்கிறார் அந்த அன்பர்.

ஏழை ஆசிரியர்களை அண்டி, அவர்களிடம் வசூலித்து எவ்வளவு தோகை சேர்த்துவிட முடியும்? பாவம்! அவர்கள் வாழ்க்கைச் சக்கரம் நகர்வதற்கே சரியான போருளாதாரப் பாதை இல்லை. இந்த நிலையிலே அவர்களிடம் 'தானம், கீனம்' என்று செல்வது சரியில்லை தான். பூமிதான இயக்க அன்பர்கள் இனியாவது ஏழை ஆசிரியர்களை அணுகாதிருப்பார்கள் என்று நம்புகிறோம். அத்துடன் அந்த ஏழை ஆசிரியர்களுக்கும் ஏதாவது தானம் வாங்கித் தருவதையும் தங்கள் தோண்டோடு சேர்த்துக் கோண்டால் உண்மையிலேயே அவர்கள் முயற்சி பாராட்டுதற்குரியதாகலாம். ★

வருந்துகிறோம்

தி. மு. கழக முன்னணி வீரரும், 'நம் நாடு' இதழின் முன்னாள் பொறுப்பாளருமான அ. பொன்னம்பலனார் அவர்களின் தந்தையார் அப்புலிங்கம் அவர்கள் 11-6-56ம் தேதி காலை 4-30 மணிக்கு இயற்கையெய்தினார் என்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம். தந்தையை இழந்து துயரத்திலாழ்ந்திருக்கும் பொன்னம்பலனார் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

[ஆ-ர்.]

சோனல்

முகப்பரு, வேனல்கட்டி, சேத்துப்புண், பித்தவெடிப்பு, தீப்பட்டபுண், சொரிசிறங்கு, கக்கூஸ் பத்து, வெட்டுக்காயம் முதலிய சருமவியாதிகளைக் குணப்படுத்துவதில் நிகரற்றது.

எங்கும் கிடைக்கும்.

ஆரன்ஸ்
கிரைப் டில் வாட்டர்

குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றுவலி, வயிற்றோட்டம், மாந்தம் முதலிய அஜீரணக் கோளாறுகளைப் போக்கி ஆரோக்கியத்தை உண்டாக்கும்.

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :

தி பாரத் டிரக் ஹவுஸ்,

மதுரை.



28. பால் நிலவே நீயே பகர்.

வெண்பாப் போட்டி 28-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம் இந்த இதழில் மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம்.

அன்னையொடு தந்தையையும் நன்னெறியார் சேவையையும்
தன்னயமாய் நாடோறும் நாடாதார்-பின்னையிந்தச்
சூழ்புவி யெங்கும் சுற்றியலைத் தென்னபலன்
பால்நிலவே நீயே பகர்.

—இராம. நரசிம்மலு, முக்கணுமலைப்பட்டி.

★

செய்ய தமிழிற்குச் சீரிடம் தாராமற்
பொய்பேசிச் சென்னையெனப் போலியிட்டு-உய்யவழி
தூள்செய்து எம்மைத் துளைத்தாளல் மாண்பாமோ?
பால்நிலவே நீயே பகர்.

—ப. இலசபதி, மதுரை.

★

கோல்பிடித்துச் செம்மை குலையா தரசோச்சி
வேல்முனைக்கும் கண்ணிமையார் வேறெவர்க்கும்-
கோல்நிலைக்க
வால்பிடித்துக் கால்தழுவி வாழ்ந்ததுண்டா வண்டமிழர்!
பால்நிலவே நீயே பகர்.

—அம்பலவாணன், அயன்வரம்.

★

நால்வேதம் தான்காட்டி நந்தமிழைப் பல்வகையாய்க்
கால்பணியச் செய்தனரே கல்நெஞ்சர்-சூழ்ச்சிகள்தாம்
தூள்பறந்து தூய்மையாய்த் தொண்டாவ தெக்காலம்
பால்நிலவே நீயே பகர்.

—வை. இராமலிங்கம், அதிராம்பட்டினம்.

★

ஆவியது போனாலும் ஆதரிக்க முன்வாராப்
பாவியரைப் பார்க்கப் படாதென்றோ-தீவிரமாய்
மேல்மேலும் ஓங்காமல் பேனியது தேய்கின்றாய்
பால்நிலவே நீயே பகர்.

—கே. சி. கஜேந்திரன், சென்னை-1.

★

கன்னித் தமிழ்நாட்டைக் கண்டதில்லை யென்றுரைத்த,
சென்னிக் கனம்பிடித்த 'சென்னையன்'-போன்றோரைப்
பாழ்மரத்திற் சேர்ப்போமா? பண்போ டிருப்போமா?
பால்நிலவே நீயே பகர்.

—க. சுப்பிரமணியம், புளியால்.

★

பதியற்ற பாவைக்குப் பற்றற்றுப் போமோ?
மதியற்ற வானம்போல் மங்கை-கதியற்றுக்
காலமெலாம் செந்நீரைக் கண்ணீராய்ச் சிந்துவதைப்
பால்நிலவே நீயே பகர்.

—அமுதன், சிக்கருயபுரம்.

★

பாங்குடனே பன்மொழிகள் பாரினிலே பல்கிடினு
மாங்கவற்று ளார்வமுடைத் தென்மொழிபோ-லோங்குபுகழ்
சால்புடைய வேறுமொழி சாற்றுவதற் கில்லையெனப்
பால்நிலவே நீயே பகர்.

—கு. பொன்னப்பன், மேல்மட்டை.

★

தென்றல் இசைபாடும் தேமலர்ப்பூஞ் சோலையிலே
மென்முத்தப் போர்துவக்கி மெய்சிலிர்க்க-இக்காழி
வாள்வீரன் என்னத்தான் வாராத தேனோடி?
பால்நிலவே நீயே பகர்.

—மா. பாஸ்கரன், பரமக்குடி.

பத்துண்டு, எட்டுண்டு, பஞ்சமில்லை!, அஞ்சுண்டு,
இத்தரையில் ஈடில் இரண்டுண்டு-எத்திசையும்
கால்நோக்கச் சுற்றிடினும் கன்னிதமிழ்க் கொப்பேது?
பால்நிலவே நீயே பகர்.

—ரெ. மல்லன், சத்திரமனை.

★

சீரிய நூல்களும் செந்தமிழும் நீக்கிவிட்டு
ஆரியத்தை ஏற்கார் அறிவுடையோர்-சீரியர்தாம்
ஏல்என்றால் பாலிருக்க ஏற்பரோ நஞ்சதனைப்
பால்நிலவே நீயே பகர்.

—மு. வெங்கடேன், துறையூர்.

★

வந்தாரென் றோடிருந்தார்; 'வாரே'னென் றேசென்றார்
எந்தயிடத் தேயுள்ளா ரென்றறியேன்-இந்தயிடம்
பாழிடமாய் மாறுதன்முன் பாவிநிலை சென்றவர்க்குப்
பால்நிலவே நீயே பகர்.

—ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

★

வாயமுதம் ஏற்பேனோ வார்த்தமுகம் சேர்ப்பேனோ!
வேய்தோள்மேற் சாய்வேனோ! வார்குழற்பூ-வேய்வேனோ!
நாளும்சேர்த் தோர்கவிதை நான்வரைவேனோ? யாதுவோ?
பால்நிலவே நீயே பகர்.

—பி. தேவஅரசு, திருச்சி.

★

தெள்ளியஎன் காதலியின் சீர்முகத்தின் நற்சுடர்சேர்
ஒள்ளொளிக்கு உன்னொளிதான் ஒப்பாமோ?-எள்ளளவும்
பால்முகத்திற் பங்கமிலாப் பாவைக்கு நீசரியோ?
பால்நிலவே நீயே பகர்.

—எஸ். சிவசங்கரன், ரிஷியூர்.

★

கண்ணுறக்கம் கொள்ளாது கல்நெஞ்சர் ஏக்கத்தால்
புண்ணாகி உள்ளம், புலம்புகின்றேன்-திண்ணியகூர்
வேல்போலத் தாக்கியெனை, வேதனையேன் மூட்டுகின்றாய்?
பால்நிலவே நீயே பகர்.

—நா. ச. மூர்த்தி, பழலூர்.

★

அறத்தே பொருள்கோடி அள்ளிக் கொடுமின்
புறத்தகலா துமமிடமே பொன்றும்-அறவாழி
மேல்முகிலாய் பெய்நீர் விரைகுவதென் நல்லாற்றில்
பால்நிலவே நீயே பகர்.

—அ. கிருஷ்ணன், சரவணபட்டி.

★

செங்குருதி பாய்ந்தாலும் செஞ்சிரங்கள் வீழ்ந்தாலும்
எங்கள் தமிழகத்தை ஈட்டிடவே செங்கையால்
வேல்பிடித்து வன்முறையை வீழ்த்திடுவோம் என்றின்றே
பால்நிலவே நீயே பகர்.

—கவிதையன்பன், திருச்சி.

★

என்னைப் பிரிந்துறையும் எந்தலைவர் பன்னாட்கள்
சென்றுறினும் செய்குற்றம தான்பொறுப்பேன்-நன்றியிலாக்
கோல்உடலார தேணமை பொறேனென நனைவர்க்குப்
பால்நிலவே நீயே பகர்.

—"தமிழருவி" வேலூர்.

★

சுத்தான நற்றமிழே இத்தரையை ஆள்வதன்றிச்
செத்தமொழி இந்திக்குச் சீரிடமோ!-புத்தமுதாம்
பல்வளமுஞ் சான்ற பைந்தமிழின் தன்மையினைப்
பால்நிலவே நீயே பகர்.

—பெரி. இராமமூர்த்தி, கடலூர்.

★

மூவேந்த ராட்சிகண்டாய் முன்னைப் பழந்தமிழின்
பாவேந்தர் நாத்திறத்தைப் பண்டுகண்டாய்-மேவியநாள்
நீள்தமிழ நாடென் றிலக்கியத்தி லுண்டென்று
பால்நிலவே நீயே பகர்.

—ச சங்கர்லால், கல்லுப்பட்டி.

★

என்றும் முழுநிலவே என்னுள் திருவிளக்கே
வென்றாய்நீ விண்ணில்வை மென்முகத்தாய்-என்றேன்நான்
மேல்நிறகப் பார்த்துன்னை மென்முறுவ லேன்பூத்தாள்
பால்நிலவே நீயே பகர்.

—ந. ஆறுமுகம், தேசுமுகிப்பேட்டை.

★

மூவேந்தர் போற்றிவந்த முத்தமிழைக் காப்பதற்குப்
பாவேந்தர் ஆற்றும பணிபெரிதாம-பாவேந்தர்
சில மறியார்க்குச் செந்தமிழின் இன்பமதைப்
பால்நிலவே நீயே பகர்.

—ஆர். சீதா, சாலிச்சந்தை.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.